
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**

**Isaiah 62:10**

**உள்ளே**


இயேசுவினுடைய மாம்சமும் இரத்தமும் ...... 2

சிந்தித்து பார் ...... 8

தேவனுடைய கட்டளைகளை பின்பற்றுங்கள் ...... 10

மேசியா தேவனுடைய தாசன் ...... 11

துக்கமும் புலம்பலும் ஆரம்பமாயிற்று ...... 16



BS 851

Tamil Version - 1

# இயேசுவினுடைய மாம்சமும் இரத்தமும்

**JESUS'S FLESH AND BLOOD**

***அதற்கு இயேசு அவர்களை நோக்கி நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.***

***(யோவா. 6 : 53, 54)***

இயேசு முதலாவது இந்த வார்த்தைகளைக் கூறினபோது "இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்கு புசிக்கக் கொடுப்பான் என்று யூதர்கள் தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள். அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். (வசனம் 52, 60) "அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின் வாங்கிப் போனார்கள். (வசனம் 66) அதைப் போலவே சுவிசேஷ யுகம் முழுவதிலும், தற்காலத்திலும்கூட இந்த விஷயத்தைக் குறித்த சச்சரவுகளும் தவறான புரிந்து கொள்ளுதல்களும் தொடர்கின்றன. ஆகையால் நமது ஆண்டவருடைய வார்த்தையின் உண்மையான கருத்தை நாம் தேடுவது நல்லதாகும். இயேசு எதனைக் குறிப்பிடவில்லை என்பதனை ஆழ்ந்த சிந்தனை மூலமாக முதலாவது தேடுவோம்.

## கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பிடவில்லை

**NOT THE LORD'S SUPPER**

பலவிதமான சபைகளில் அடிக்கடி நடத்தப்படும் கர்த்தருடைய இராப்போஜன ஆசரிப்பையோ "நற்கருணை ஆராதனைகளையோ" இயேசு இங்கே கூறவில்லை. வேத வாக்கியத்தின் இந்த பகுதி கர்த்தருடைய இராப் போஜனத்தின் திருவிருந்து ஆராதனையைக் குறிப்பதாக சிலர் நம்மிடம் கூறுகின்றனர். ஆனால் கர்த்தர் இந்த வார்த்தைகளை தம்முடைய மரணத்திற்கு முந்தய நாளில் மேல் அறையில் ஏற்படுத்தப்பட்ட கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்பே பேசினார் என்பது கவனிக்கப்பட வேண்டும். ஆகையால் இயேசு, கர்த்தருடைய இராப்போஜன ஆராதனையின் பொழுது இந்த வார்த்தைகளைக் கூறவில்லை.



JESUS SPEAKING TO THE MULTITUDE

## நர மாம்சம் புசிப்பதைக் குறிப்பிடவில்லை

**NOT CANNIBALISM**

சொல்லர்த்தமான மனித மாமிசத்தை புசிப்பதையும் சொல்லர்த்தமான மனித இரத்தத்தை குடிப்பதையும் குறிக்கக் கூடிய இருண்ட கால இருள் சூழ்ந்த ஒழுக்கக் கேடான புறமத பழக்கவழக்கமாகிய நரமாம்சம் புசிப்பதை ஆண்டவர் ஆதரிக்கவில்லை. ஆயினும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டவர்களில் சிலர் அதனை சொல்லர்த்தமாக எடுத்துக்கொண்டு அத்தகைய சிந்தனையினால் இடறினார்கள். ஆகையால் இயேசுவினுடைய வார்த்தைகளை "ஒரு கடினமான உபதேசம்" என்று கூறினார்கள். அந்த சிந்தனையால் அவர்கள் எவ்வாறு பயந்து நடுங்கியிருப்பார்களோ! சாதாரண கீழ்த்தரமான மிருகங்கள் சம்பந்தமாகவுங்கூட ஆதி. 9 : 4-ல் "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத் தோடே புசிக்க வேண்டாம்" என்று தேவன் கட்டளையிட்டுள்ளார். மேலும் "இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்களுக்குள் தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் இரத்தம் என்னப்பட்டதைப் புசித்தால் இரத்தத்தைப் புசித்த அவனுக்கு விரோதமாக நான் என் முகத்தைத் திருப்பி அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அவனை அறுப்புண்டு போகப் பண்ணுவேன்" என்றும் லேவி. 17 : 10-ல் அவர் கட்டளையிட்டுள்ளார். (வசனங்கள் 11-14). இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை சொல்லர்த்தமாகவே எடுத்துக்கொண்டு அவருடைய மாம்சத்தையும் அவருடைய இரத்தத்தையும் உண்மையாகவே புசித்து பானம் பண்ணுவதாக கருதுபவர்கள் அவைகளைப் பற்றி விசாரிப்பதற்கு மனதைத் திருப்பாமல் வெறுப்படைந்து வெளியேறுவது சற்று ஆச்சரியமானதாகும். அநேகமாக அவர்களில் அநேகர் தாங்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்துகொண்டி ருக்கிறவர்களாகவும் அவை அவர்களுக்கு அநியாயமாகவும் தகாததாகவும் காணப்பட்டாலும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் குறித்து சிந்திக்க வேண்டியதில்லை என்று நினைக்கின்றனர். ஆனால் நிச்சயமாகவே நமது கர்த்தர் நர மாம்சத்தைப் புசிப்பதைப் போதிக்கவில்லை.

## திருபலிபூசையை (Mass) குறிப்பிடவில்லை

**NOT THE MASS**

இயேசு சொல்லர்த்தமாக தம்முடைய மாம்சத்தைப் புசிக்கும்படியோ சொல்லத்தமாக தம்முடைய

THE BIBLE STANDARD - (ISSN:1556-8555) Publisher, the Laymen's Home Missionary Movement -Bible Standard Ministries 1156 St. Matthews Road,Chester Springs, PA, 19425-2700, U.S.A. Editor, Ralph M. Herzig. Rates : One year's subscription-$12.00 (6 issues); single issues-$2.50 each. Web Site : www.biblestandard.com

இரத்தத்தைப் பானம் பண்ணும்படியோ போதிக்கவில்லை. ஆயினும் அவ்வித கருத்தையடைய போப்பு மார்க்கத்தை "பாழாக்கும் அருவருப்பாக" ஆக்கிய மாபெரும் அசுத்தமான தப்பறையாகிய மாஸ் திருபலி பூசையைக் குறிப்பதாக சிலர் கூறுகின்றனர். (மத். 24 : 15; தானி. 11 : 31; 12 : 11. மேலும் விளக்கங்களுக்கு – உம்முடைய இராஜ்யம் வருவதாக S.Vol-3. அத்தியாயம் II-IV ஐ பார்க்கவும்) மாஸ் திருபலியின் மத சடங்கில் ஒரு பாதிரியார் பீடத்தின் முன்பாக நின்று கொண்டு தனது கையில் சிறு அப்பத்துண்டை எடுத்துக் கொண்டு வானத்துக்கு நேராக அதனை உயர்த்திப் பிடித்து லத்தீன் பாஷையில் "ஹாக் எஸ்ட் கார்ப்பஸ் மியம்" (Hoc est corpus meum) என்று கூறுவார். அதற்கு "இது என்னுடைய சரீரம்" என்று அர்த்தம். பாதிரியார் இந்த கலத்தின் வார்த்தைகளை கூறும்பொழுது சில விசேஷித்த உரிமை மற்றும் தேவனிடத்திலிருந்து புறப்படும் இரகசிய வல்லமையால் பார்ப்பதற்க அப்பத்தைப் போலவே தோற்றமளிப்பினும் எந்த அப்பம் உடனடியாக ஆண்டவராகிய இயேசுவின் உண்மையான சரீரமாக மாறுகிறதாக கோரப்படுகிறது. ஆயினும் இன்னும் அப்பமாக காட்சியளிக்கிறது. இந்த நிரூபணம் இல்லாத அற்புதமாகிய அப்பம் மாம்சமாக மாற்றமடையும் செயல் நடைபெற்ற பின்பு பாதிரியார் அப்பத்தை எடுத்து அதைப் பிட்டு (இவ்வாறாக புதிதாக இயேசு பலியிட்டதாக கோருகின்றனர்) பீடத்தின் முன்பாக முழங்கால்படியிட்டு இருப்போர்களின் நாவுகளில் அதின் துண்டுகளை வைத்து "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இந்த சரீரம் நித்திய ஜீவனிற்கு உன் ஆத்துமாவைக் காப்பாராக. ஆமென்" என்று மறுபடியும் கூறுவார்.

அதனைப் பெற்றுக் கொண்டவர் அதனைப் புசிப்பது சொல்லர்த்தமாகவே இயேசுவினுடைய உண்மையான சரீரத்தைப் புசிப்பது என்று கோரப்படுகிறது. அவர்கள் உபயோகிக்கும் திராட்சை ரசமும் அதைப்போலவே பார்ப்பதற்கு திராட்சை ரசமாக காணப்படினும் அது இயேசுவின் அதே இரத்தமாக மாறிவிட்டதாக எண்ணுகின்றனர். இவ்வாறாக அதில் பங்கு பெறுகிறவர்கள் மனுஷகுமாரனுடைய உண்மையான மாம்சத்தை சொல்லர்த்தமாக புசிப்பதாகவும் அவருடைய உண்மையான இரத்தத்தை சொல்லர்த்தமாகவே பானம் பண்ணுவதாகவும் அது முதல் அவர்கள் தங்களில் ஜீவனைப் பெற்றிருக்கிறார்களென்றும் எண்ணும்படியாக ஏமாற்றப்படுகிறார்கள்!

இராப்போஜனத்தின்போது அனுசரிக்கிற அப்பமும் திராட்சை இரசமும் இயேசுவின் மாம்சமாகவும் இரத்தமாகவும் மாறுகிறது என்கிற போதனை ரோம கத்தோலிக்க சபையில் இறுதியாக ஒரு மத கோட்பாடாக ஆனது. (TRENT) ட்ரெண்டு என்கிற இடத்தில் ஆலோசனைக் கூட்டம் ஏற்பட்டபேது அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு: "கத்தோலிக்க சபையில் இராப்போஜனம் – திருபலிபூசையை அனுசரிக்கும்போது சரீரமும் இரத்தமும் சேர்ந்து அவரின் ஆத்துமாவோடு கூடி நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தெய்வீக தன்மையையும் இப்படியாக கிறிஸ்துவின் முழுமையும் உண்மையாகவம், உள்ளபடியே இந்த சாக்கிரமந்தை (னகனப்) அனுசரிக்கையில் மாறுகிறது என்கிற கத்தோலிக்க மத கோட்பாட்டை மறுதலித்து, இது வெறும் ஒரு அடையாளமே, உண்மையாக அப்படி மாறுவதில்லை என்று கூறும் நபர் சபிக்கப்பட்டவராக இருப்பார்."

கீழ்க்கண்ட பகுதி டைஹர்பியின் ரோமன் கத்தோலிக்க மத வினாவிடைப் புத்தகம் (Deharbe's Roman Catholic Catechism) பக்கம் 263, 265, 288 இவ்வாறாக கூறுகிறது. "நற்கருணை என்கிற பூசை இயேசுவின் மரணத்தை அனுசரிக்கும் சடங்கு இயேசு கிறிஸ்துவால் நிர்ணயிக்கப்பட்டவை. இதனை அவர் கடைசி இராப்போஜனத்தின் போது தம்மைத்தாமே அப்பமும் திராட்சை ரசமாக கருதி அதனைப் பரத்திலிருக்கும் பிதாவிற்கு கொடுத்தார். இந்த பலியை இதுமுதற்கொண்டு ஒரு சடங்காக அனுசரிக்க கட்டளையிட்டார்.

"இந்த திருப்பலி பூசை (MASS) தொடர்ந்து கடைபிடிக்க வேண்டிய ஓர் பலி. இது ஒரு புதிய விதி. இதில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை தாமே கொடுத்தார். இது அந்த ஆராதனை நடத்தும், குருவின் கைகள் மூலம் கிடைக்கப் பெறுகிறது, இரத்தம் எதுவும் இல்லாத விதத்தில் அப்பமும் திராட்ச ரசம் என்கிற வடிவில் இப்போது பரத்தில் இருக்கும் பிதாவிற்கு கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே ஒரு முறை இயேசு சிலுவையில் இரத்த காயங்களோடு தம்மைக் கொடுத்த விதமாக, திருபலி பூசையும் சிலுவையில் செலுத்தப்பட்ட பலியைப் போன்று அவசியமானதே. திருபலி பூசையும் சிலுவையில் செலுத்தப்பட்ட பலியைப் அவசியமானதே. பலிகளை செலுத்தின விதம் மாத்திரமே ஒரே வித்தியாசமாகும். திருப்பலி பூசையை பிரதான ஆசாரியன் அளிக்கிறார் – கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே பலியிடப்பட்டார். ஏனென்றால் இந்த திருபலி பூசையின்போது கடவுளுக்கு கொடுக்கும் பலியை கிறிஸ்து லுவையில் தொங்கும் போது பிதாவிற்கு நமக்காக கொடுத்தார். அதனையே தொடர்ந்து நினைவு கூற வேண்டும் ...... அதன் மூலம் நமக்கு தெய்வீக இரக்கம் கிடைக்கிறது. (1) தவறு செய்ததற்காக மனம்கசந்து வருந்தும் கிருபையும் மன்னிப்பும் கிடைக்கிறது. (2) பாவத்திற்கும் கிடைக்கும் தற்காலிக தண்டனையில் இருந்து மன்னிப்பு கிடைக்கிறது ......... இவ்வுலகில் நாம் செய்த பாவங்களுக்கு தண்டனையை ஒன்று நாம் இவ்வுலகத்தில் அனுபவிக்க வேண்டும் அல்லது இறந்த பிற்பாடு ஆத்துமாவை உத்தரிப்பு ஸ்தலத்தில் அனுபவிக்க வேண்டும்." நாம் தெளிவாக காணலாம். ஒரு தவறான அல்லது போலியான ஒரு பலி. அதனை உள்ளபடி புசிக்க வேண்டும். அது எதற்கு பதிலாக என்றால் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியின் பலிக்கு பதிலாக (யோ. 1 : 29) இது நடப்பித்திருக்கிறது. நித்திய காலத்திற்கும் ஒரே முறைதான் மறுபடியும் மறுபடியும் செய்ய வேண்டியதில்லை. இயேசு கிறிஸ்துவின் சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டிருக்கிறது. (எபி. 10 : 10) நாம் அதனை விசுவாசத்துடனே புசிக்க வேண்டும். ஆனால் ரோமன் கத்தோலிக்க சபையார், கிரேக்க கத்தோலிக்கர் ஆங்கிலிக்கன் கத்தோலிக்கர் (Roman Catholics, Greek Catholics and High church Anglican Catholics (Episcopalians) ஆகிய இவர்களின் நற்கருணை ஆராதனையில் அடிப்படையாக விளங்குவது கிறிஸ்து மறுமடியும் புதிதாக பலியிடப்பட்டு சொல்லர்த்தமாக அவரின் சரீரத்தை நாள்தோறும் உலகமனைத்தும் புசிப்பதாக ஒரு பழக்கத்தை இவர்கள் கடைபிடித்து வருகிறார்கள்.

மாஸ் – திருபலி பூசையைக் குறித்து வேதாகமத்தில் அது தேவனுடைய பார்வையில் அருவருப்பான ஒன்று என்று காண்பிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் "கிறிஸ்து இனி ஒருபோதும் மரிப்பதில்லை என்றும் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர்

என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உண்மையை அலட்சியம் செய்து நாசமாக்கிற்று (ரோம. 6 : 9 10; எபி. 10 : 14). மாஸ் திருபலியானது கிறிஸ்துவை மறுபடியும் பலியிடுவதாக கோருகிறது அதன்மூலம் கிறிஸ்துவின் மாபெரும் ஈடுபலியை குறைவுள்ளதாக குறிப்பிடுகிறது. "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய ரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" என்ற போதனையை எதிர்த்து மறுக்கிறது. (எபி. 7 : 25)

## சொல்லர்த்தமாகவே புசிப்பதைக் குறிக்கவில்லை

### NOT LITERAL EATING

முடிவாக, நமது பாட வசனத்தின்படி இயேசுவான வர் சொல்லர்த்தமாக அவருடைய மாம்சத்தை புசிப்பதை பற்றியோ சொல்லர்த்தமாக அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவதை பற்றியோ எவ்வித கருத்திலும் போதிக்கவில்லை. அவர் கூறிய விஷயம் சொல்லர்த்த மான புசித்தலையும் பானம் பண்ணுதலையும் குறிப்பிடுவ தாக எடுக்கப்படகூடாது! அவரது பாஷை நடை மிகுதியான உருவகங்களாகவும் அடையாளங்களாகவும் இருந்தன. அவர் அநேக உவமைகளையும், உருவகங்களையும் அடையாள பாஷைகளையும் சத்தியங்களை விளக்கிக் கூறுவதற்கு உபயோகித்தார். வாழ்வின் செயல்களையும் சேர்த்து வேதாகமம் முழுவதும் அடையாள பாஷையே இடம் பெற்றுள்ளன. இதே விதத்தில் தான் "ஒளியில் நடவுங்கள்" என்றும் (எபே. 5 : 8; யோவா. 12 : 35) "நமக்கு நியமித் திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்றும் (எபி. 12 : 1) "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு" என்றும் (1 தீமோ. 6 : 12; 1 கொரி. 9 : 26) நடுதல் மற்றும் நீர்ப்பாய்ச்சுதல் பற்றியும் கட்டடம் கட்டுதல் குறித்தும் இவை போன்றவைகளால் நாம் புத்தி புகட்டப்பட்டிருக்கி றோம். சொல்லர்த்தமான நடத்தல் ஓடுதல் போரிடுதல் போன்ற வார்த்தைகளை இந்த இடங்களில் நமது ஆண்டவர் நிச்சயமாக குறிப்பிடவில்லை. மாறாக இந்த வார்த்தைகளை உருவகங்களாக உபயோகிக்கிறார். அதைப் போலவே இயேசு நமது பாட வசனமாகிய அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் புசித்து பானம் பண்ணும்படியாக கூறும்போது அவர் சொல்லர்த்தமாகவே அவருடைய மாம்சத்தைப் புசிப்பது என்றோ சொல்லர்த்த மாகவே அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவது என்றோ குறிப்பிடவில்லை. பிறகு அவர் எதைக் குறிப்பிடுகிறார்?

## ஈடுபலி புண்ணியத்தை விசுவாசத்தின் மூலம் உரித்தாக்குதல்

### APPROPRIATING BY FAITH THE MERIT

ஒருவன் மனுஷ குமாரனுடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் புசித்து பானம் பண்ணுவது என்பது அவனுடைய நம்பிக்கையையும் அதை ஏற்றுக் கொண்டதையும் தனக்கு உரித்தாக்கிக் கொண்டதையும், இயேசு தன்னுடைய பூரண மனுஷீகத்தை பலியிட்டதையும், மேலும் அவர் தன் ஜீவ உரிமைகளை, ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும், "உலகத்தின் ஜீவனுக்காக" (யோவா. 6 : 51) அவர் மரிக்கும்போது அர்ப்பணித்ததை யும் அதனால் ஏற்படும் மதிப்பின் மேல் வைக்கும் விசுவாசத்தைக் குறிக்கிறது. ஆதித் தகப்பனான ஆதாம், மனுஷீக நிலையில் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப் பட்டான். அவனுக்கு பூரணமான சரீரமும், ஜீவனும், ஜீவனோடு இருப்பதற்கான உரிமையும் அதோடு சேர்த்து ஜீவனோபாயங்களான பூரண குடியிருப்பு (பரதீஸ்) காற்று, உணவு, உறைவிடம், சீதோஷண நிலை, ஆரோக்கியம், செழுமை, தேவனோடும் மற்றவர்களோடும் உள்ள கூட்டுறவு, உலகின் மேலும் அதின் ஒழுங்குகளின்மேலும், மிருக ஜீவன்கள் மேலும் ஆட்சி செய்யும் உரிமையும், பூரண சந்ததியை பலுகப் பண்ணுவதற்கு உரிய உரிமையும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட இந்த ஆசீர்வாதங்கள் கீழ்ப்படிதல் என்ற நிபந்தனையோடு கொடுக்கப்பட்டது. தேவனுக்கும், ஆதாமுக்கும் இருந்த உறவில் ஓர் உடன்படிக்கை இருந்தது குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓசி. 6 ; 7; R.V. மொழிபெயர்ப் பிலும் மார்ஜினிலும் பார்க்கவும் ). ஆதாம் அந்த உடன்படிக்கை யில் தன் பங்கை காப்பாற்றி வந்த காலம் வரை. தேவனும் அவனுக்கு எல்லா உரிமைகளையும், சிலாக்கியங்களையும் அவன் சிருஷ்டிக்கப்பட்டதின் அன்பளிப்பாக அவனுக்கு தொடர்ந்து கொடுத்தார். ஆதாம் அவனுடைய கீழ்ப்படியா மையினால் ஜீவனை இழந்தான், மேலும் அவனுக்குள்ள உரிமைகளையும் அவனால் வரக்கூடிய அவன் சந்ததியாரின் உரிமைகளையும் இழந்தான். (ரோம. 5 : 12–14) ஆகையால் அவனால் தேவனிடம் இணக்கமாக உள்ள பூரண சந்ததியை பிறப்பிக்க முடியாமல் போனது, மேலும் நித்திய ஜீவனோடு இருக்கும் சிலாக்கியத்தை இழந்தான்; அவனுடைய சந்ததியார் அவனைப் போல் இருந்தார்கள் – மரித்தார்கள் (மரித்துக் கொண்டிருந்தார்கள்) நித்திய ஜீவனுக்கு பொருத்தமில்லாதவர்கள் ஆனார்கள். தேவனுடைய ஏற்பாட்டின்படி ஓர் மீட்கும் பலி அவசியமாய் இருந்தது – பூரண மனித சரீரத்தையும், ஜீவனையும், வாழ்வதற்கான உரிமையையும், ஜீவனோபாயங்களையும் உடைய யாரேனும் ஒருவர் ஆதாமின் இடத்துக்கு வந்து மீட்கும் பொருளான மரணத்தை அனுபவிக்க வேண்டும். அப்படி செய்தால் தான் ஆதாமையும் அவனுடைய சந்ததியையும் மரணத்தில் இருந்து விடுவிக்க முடியும்.

மேலும் மனுக்குலம் அபூரணமாய்க் காணப்பட்டதால் தேவ நீதியானபடி ஒருவரும் தன் சகோதரனுக்காக ஜீவனைக் கொடுக்க முடியாமல் போனது (சங். 49 : 7) – ஏனெனில் அனைவரும் பாவிகளாகி, நித்திய ஜீவனுக்கு மிகவும் தேவையென தேவன் கருதும், பரிபூரண தன்மையையும் மகிமையையும் தேவ கிருபை அற்றவர்களானார்கள் (ரோம. 3 : 23) இந்த தேவைகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு தேவன் தம்முடைய குமாரனின் மூலம் ஏற்பாடு செய்தார், அவருடைய குமாரனும் தனக்கு முன் வைக்கப்பட்ட சந்தோஷத்தின் பொருட்டு இவற்றை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு மரித்தார் (எபி. 12 : 2)

நம்மை தேவனிடத்திடல் சேர்க்கும்படி அநீதியுள்ள வர் களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களின் நிமித்தம் ஒருதரம் பாடுபட்டு மாம்சத்திலே கொலை யுண்டார் – அவர் பூரண மனிதனாக இருந்ததால் ஆதாமுக்காகவும் அவன் சந்ததிக்காகவும் மீட்கும் பொருளாக வந்தார். (1 பேது. 3 : 18; மத். 20 : 28; 1 தீமோ. 2 : 6; எபி. 2 : 9) ஆகையால் இயேசுவின் மாம்சம், அவருடைய மனுஷீகம் ஆதாமுக்காகவும் அவன் சந்ததிக்காகவும். அதாவது உலகத்தின் ஜீவனுக்காக கொடுக்கப்பட்டது, இதனால் உலக மக்கள் மரணத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்படு வார்கள். நமது கர்த்தர் அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் புசிக்க அழைத்தபோது, அவர் மறைபொருளாக ஓர் காரியத்தைக்

குறிக்கிறார், அதை நாம் உணர்ந்துகொள்ளும் அது அழகாகவும் எளிமையாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது. அவருடைய பலியின் மூலமாக பலனடைந்த அனைவருக்கும். அடையாளமாக அவருடைய மாம்சத்தைப் புசிப்பதும் அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவதும் நிச்சயமாக ஓர் தனிப்பட்ட விஷயமாகும். புசித்தலும் குடித்தலும் விசுவாசதத்தின் மூலம் உரித்தாக்கிக் கொள்ளுதலைக் குறிக்கிறது. ஒருவன், மீட்பு கிறிஸ்துவினிடத்தில் தான் உள்ளது என்ற உண்மையை விசுவாசித்து உணரும்போது. அதன் காரியமாக தேவனிடத்தில் ஜெபம் செய்து, விசுவாசத்தால் அவருடைய பாவங்களுக்கான மன்னிப்பையும், தேவனிடத்தில் ஒப்புறவாகுதலை யும் ஏற்றுக் கொண்டவன் - அடையாளமான தேவனுடைய குமாரனின் மாம் சத்தை புசித்து இரத்தத்தை பானம் பண்ணுகிறான் - அவருடைய மாம்சம் என்பது அவருடைய சதையையோ, கொழுப்பையோ, எலும்பையோ அல்லது அவருடைய இரத்தம் என்பது அவரின் இரத்த அணுக்களையோ புசிப்பதாக அர்த்தம் கொள்ளவில்லை - ஆனால் அவரின் மாம்சமும் இரத்தமும் அவரின் மனித தன்மையையும் அதோடு சேர்த்து அவருடைய ஜீவனோடிருப் பதற்கான உரிமையையும், ஜீவ ஆதாரங்களையும் அர்த்தப்படுத்துகிறது. ஒரு கருத்தில் மாம்சத்தையும் இரத்தத்தையும் சொல்லர்த்தமாக பொருள் கொள்ளும்போது அது மனித இயல்பையும் மனுஷீகத்தை யும் குறிக்கிறது (மத். 16 : 17;1 கொரி. 15 : 50; எபி. 2 : 14). ஒருவன் அடையாளமான புசித்தலில் பங்குபெறுவது என்பது இயேசுவின் ஈடுபலியால் விளையும் அனுகூலங்களிலும், பலன்களிலும் பங்குபெறுவதாகும். இயேசுவின் சொல்லர்த்தமான மாம்சத்தையும் இரத்தத்தையும் இரட்சிப்பின் உபயோகத்திற்காக அவருடைய மனுஷீகத்தை சொந்தமாக்கிக் கொள்வதாகும்.




விசுவாசத்தின் மூலம் புசிப்பதும் பானம் பண்ணுவது என்பது நமது கர்த்தர் பூரண மனிதனாக அனுபவித்த ஆசீர்வாதத்தையும். உரிமையையும் சொந்தமாககிக் கொள்வதைக் குறிக்கிறது; இது நமது நீதியையும், தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவையும் அதனால் அவர் நமது பாவங்களை கிருபையால் தள்ளிவிட்டதால் அல்லது மூடினதால் வரும் சந்தோஷத்தையும், அமைதியையும் மேலும் இயேசுவின் ஈடுபலியினால் தேவனோடு உள்ள கூட்டுறவையும் அர்த்தப்படுத்துகிறது. நாம் மேலும் மேலும் செப்படுவதற்கு புசித்தலிலும் பானம் பண்ணுவதிலும் தொடர வேண்டும் - மேலும் நாம் அதிகமதிகமாக ஆச்சரியப்படத்தக்க ஆசீர்வாதத்தையும். நன்மைகளையும் மேலும் நமது கர்த்தரின் தேவ தயவையும் நமக்கு சொந்தமாக்கிக் கொள்ள இருக்கிறோம், இவைகளை அவர் நமக்காகவும் ஆதாமின் சந்ததியார் அனைவருக்காகவும் கொடுத்து விட்டார்.

## கர்த்தரின் இராப்போஜனம்
### THE LORD'S SUPPER

நாம் பாடப்பகுதியில் ஏற்கனவே பார்த்தபடி, புசித்தலும் குடித்தலும் நம்பிக்கையைக் குறிக்கிறது. இது நமக்கு தெரியும் ஏனென்றால் இயேசு புசித்தலையும் குடித்தலையும் நம்பிக்கையோடே (யோவா. 6 : 40, 47-ஐ யோவா. 6 : 35, 50-59 உடன் ஒத்ப் பார்க்க) இணைக் கிறார்; இந்த ஒவ்வொன்றிலும் புசித்தலும், குடித்தலும் நேரிடையாக விசுவாசத்தைக் குறிக்கிறது - இதில் நித்திய ஜீவன் என்ற ஒரே கருத்தை அப்பியாசப் படுத்துவதாக இருக்கிறது. நமது கர்த்தரின் அடையாளமான புசித்தலும், குடித்தலும் நாம் பார்ப்பது, பிட்கப்பட்ட அப்பமானது அவருடைய பூரண மனுஷீகம் மரித்ததையும், ஊற்றப்பட்ட திராட்சரசம் அவர் சிந்திய இரத்தத்தை யும் குறிக்கிறது. கர்த்தருடைய இராப்போஜனத்தில் நாம் புசிக்கும் அப்பமானது இயேசுவின் பூரண மனுஷீகத்தை விசுவாசத்தால் ஏற்றுக்கொண்டதை யும், நாம் குடிக்கும் இரசமானது அவரின் வாழ்வதற்கான உரிமையை யும், ஜீவனோபாயங்களையும் அவரின் மரணத்தில் நமக்காக அர்ப்பணித் ததை விசுவாசத்தால் நமக்கு சொந்தமாக்கிக் கொண்டதை யும் குறிக்கிறது. (மத். 26 : 26-28; மாற். 14 : 22-24)

## மற்றொரு ஆதாரம்
### ANOTHER PROOF


நாம் ஏற்கனவே பார்த்து விட்டபடி, நமது பாடப்பகுதியில், இயேசு இராப்போஜனத்தை (பஸ்காவை) ஒரு சடங்காச்சாரமாகக் குறிப்பிடவில்லை. கர்த்தரின் இராப் போஜனத்தைப் பற்றி மற்றொரு ஆதாரம் யோவா. 6-ம் அதிகாரத்தில் காண்பிக்கப்படுகிறது. இதில் யாரெல்லாம் பங்குபெற வில்லையோ அவர்கள் இழந்து போவார்கள் என்றும் யாரெல்லாம் பங்கு பெறுகிறார்களோ அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்றும் ஆதாரம் அளிக்கிறது. (வசனம் 51, 53, 54, 58) மேலும். நிச்சயமாக இதில் பங்கு பெறாத நிறைய பேர் ரட்சிக்கப்படுவார்கள்; இதில் பங்கு பெற்ற சிலபேர் இழந்து போகவும் கூடும். அப்படியென்றால் இதில் என்ன ஒற்றுமை இருக்கிறது? விசுவாசத்தினால் நமது கர்த்தரின் பூரண மனுஷீகத்தையும் (அடையாளமான அவருடைய மாம்சத்தைப் புசித்தல்) அவரின் ஜீவனுக்கான உரிமையையும். அதோடு சேர்த்து அவரின் ஆதாரங் களையும் (அடையாளமான இரத்தத்தைப் பானம் பண்ணுதல்) நமக்கு உரித்தாக்கிக்கொள்ளுதல் என்பது உண்மையாகும். இதுவே யோவான் 6-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யோவான் 6-ம் அதிகாரத்தில் உள்ள இத்தகைய உருவகமான மாம்சத்தை புசித்தலும் இரத்தத்தை பானம் பண்ணுதலும் கர்த்தருடைய இரப் போஜனத்தில் வருகிற அப்பம் புசிப்பதின் மூலமும் பாத்திரத் தில் பானம் பண்ணுவதின் மூலமும் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. யோவா. 6-ம் அதிகாரம் உண்மையானதை யும் கர்த்தருடைய இராப்போஜனம் அந் உண்மையானதின் அடையாளத்தையும் நமக்கு கொடக்கின்றன என்ற நோக்கு நிலையில் இவைகள் இசைந்துள்ளன.

கர்த்தரின் இராப்போஜனத்தில் பிட்கப்படுகிற அப்பமும் ஊற்றப்படுகிற திராட்சை பழ ரசமும் கிறிஸ்துவின் மரணத்தை அதாவது மீட்கும் பலியைக் குறிக்கின்றன. யோவான் 6 ஆம் அதிகாரத்தில் இந்த மீட்கும் பலி நேரிடையாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடைபிடிக்கப்பட வேண்டிய தொடர்ந்து கடைபிடிக்கப் பட வேண்டிய ஒன்றாகும். கிறிஸ்து தன்னுடைய ஜீவியத்தை தனக்காக உபயோகிக்க தடை செய்யப்பட்டார். அதனால் அவருடைய பூரண மனுஷீகத்தையும், ஜீவனையும், வாழ்வதற்கான உரிமையையும். ஜீவ ஆதாரங்களையும் நமக்கு உரித்தாக்கிக் கொள்ளும் வாய்ப்பு அதனாலேயே கிடைத்தது. இதை அவர் தன் சொந்த உபயோகத்திற் காக வைத்திருக்கும் வரையில், அதை வைத்து சபையையோ, உலகத்தையோ மீட்பதற்கு மீட்கும் பொருளை உபயோகப்படுத்த முடியாது, ஆகையால் அது நித்திய ஜீவனுக்கு அடையாளமான போஜனமாய் இருக்கிறது.

## இயேசுவே ஜீவ அப்பம்

### JESUS, THE LIVING BREAD

நானே வானத்திலி ருந்து இறங்கின ஜீவ அப்பம் யோவா. 6 : 51-ல் இயேசு விவரிக்கிறார். அவர் தன்னுடைய மாம்சத்தை உலக மக்களின் ஜீவனுக்காகக் கொடுப்பால். அவர் தன்னுடைய பூரண (புளிப்பில்லா) மனுஷீகத்தைக் கொடுப்பதாக அல்லது அர்ப்பணிப்பதாக அர்த்தப்படுத்துகிறார், அவரின் ஈடுபலியை ஏற்றுக் கொள்வ தாலும் அவருடைய மனுஷீக உரிமைகளை நமக்கு சொந்தமாககிக்கொள்வதாலும் (புசிப்பதாலும்) இந்த உலக மக்கள் பூரண மனுஷீக நிலையை அடைய முடியும் ("அதுவே நாம் இழந்தது மத். 18 : 11) இந்த அப்பமானது தேவன் குறிப்பிட்ட வழியில் வந்து, இழந்து போனதைத் திரும்பப் பெறும் விருப்பம் உள்ள அனைவருக்கும் வழங் கப்படும், மேலும் சுவிஷேச யுகத்தில் தேர்தெடுக்கப்பட்டவர்களானாலும், "இனி வரும் யுகமான" ஆயிர வருட யுகத்திலானாலும் ஒருவர் இதன் பலனைப் பெறும் முன் அதைக் கண்டிப்பாக ஏற்றுக்கொண்டு தமக்கென சொந்தமாக்கிக்கொண்டு, அதன் பலனை உணர்ந்து கொண்டவராய் இருக்க வேண்டும் (மனதில் ஜீரணித்தல்). மீட்கும் பலியை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் இழந்து போனதைத் திரும்பப் பெறுவார்கள், மேலும் பூரண மனுஷீக நிலையை அடைய அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமை மறுபடி வழங்கப்படும். இந்தத் திரும்பக்கொடுத்தலானது சுவிசேஷ யுகத்தில் முன்குறிக்கப் பட்ட விசுவாசிகளுக்கு வழுங்கப்பட்டது, மேலும் இது ஆயிர வருட யுகத்தில் மனுக்குலமனைத்திற்கும் கிடைக்கும்.




யோவா. 6 : 51-ல் இயேசு நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமும் என்ற வார்த்தையில் இரண்டு காரியங்களை அடையாளப்படுத்துகிறார். (1) பின்வரும் மனுக்குலத்துக்கு கிடைக்கக்கூடியதாய், அவர் தன்னுடைய பூரண மனுஷீகத்தையும் அதோடு சேர்த்து அவரின் ஜீவனுக்கான உரிமையையும் கொடுக்கிறார். அவருடைய மனுஷீகம் அர்ப்பணிக்கப்பட வேண்டும். அவருடைய சொந்த உபயோகத்திற்காக அவர் அதனை திரும்ப எடுத்துக் கொள்வாறாகில் ஒருவருக்கும் ரட்சிப்பு கிடைக்காது.

(2) கிறிஸ்து தன்னைத்தான் மனுக்குலத்திற்கு பலியாக கொடுத்தது இரண்டு பகுதிகளாய் உள்ளது. முதலாவது சுவிசேஷ யுகத்தில் உள்ளது தேர்தெடுக்கப் பட்டவர்களுக்கு, இரண்டாவது தேவனின் பூமிக்குரிய இராஜ்யம் ஸ்தாபித்து முடித்த பின்பு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற சிலுவை மரணத்தால் தேர்ந்தெடுக்கப் படாதவர்களும் நித்திய ஜீவனைப் பெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

## பஸ்காவின் அடையாளம்

### THE PASSOVER TYPE

அடையாளமான பஸ்காவில் இஸ்ரவேலர்கள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வீட்டுவாசல் நிலைக்கால் கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து பின்பு அதை புசித்தார்கள். இதன் நிறைவேறுதல் "மனுஷ குமாரனின்" "மாம்சத்தைப் புசிப்பதாகும்." "அவர் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து" (1 கொரி. 5 : 7) அவருடைய மீட்கும் பலியில் விசுவாசம் வைத்து தங்களுக்கு உரித்தாக்கிக் கொண்டு, அதில் பங்கெடுத்து தேவனுக்கு முன்பாக நீதியைப் பெற்றுக் கொள்வார்கள். அனைவரும் அவருடைய இரத்தத்தின் மதிப்பை உணர்ந்து அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். விலைமதிப்பற்ற சர்வலோகத்தின் பாவத்தை நிவர்த்தி செய்வதற்காகவே அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. (1 யோவா. 2 : 2) நமக்கு கொடுக்கப்பட்ட வாக்கியம் விலைமதிப்பற்ற அப்பத்தையும் பானத்தையும் பற்றி பேசுகிறது என்பதைக் காண்கிறோம் - அது மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்த மிகச் சிறந்த பரிசாகிய அவருடைய மாம்சத்தையும். இரத்தத்தையும் குறிக்கிறது. யோவா. 6 : 55-ல் "என் மாம்சமே மெய்யான போஜன மாய் இருக்கிறது என்இரத்தம் மெய்யான பானமாய் இருக்கிறது" என்று இயேசு கூறுகிறார். வேறு எந்த அப்பத்தை விடவும் வேறு எந்த பானத்தை விடவும் இது விலையேறப்பெற்றதாய் இருக்கிறது. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரின் தியாகத்தால் "மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தி னாலே வெளியரங்கமாக்கினார்" (2 தீமோ. 1 : 10). கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகள் மனுக்குலம் முழுவதுக்கும் இழந்து போனது திரும்பக் கொடுக்கப்படும் அல்லது சீரான நிலைமைக்கு கொண்டுவரப்படும் என்பது வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. (அப். 3 : 19-21). மேலும் அது அழியாமையை வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறது - அது அழிக்க முடியாத. அழிவற்ற மரணம் ஆட்கொள்ள முடியாத இயற்கை எய்யாமையைப் பெற்ற தெய்வீக நிலையாகும். அதாவது ஒருவன் **"தன்னில் தானே ஜீவனோடு"** இருக்கக்கூடிய நிலை (யோவா. 5 : 26; யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு அத்தியாயம் - X)

## “உங்களுக்குள்ளே ஜீவன்” (யோவா. 6 : 53) மற்றும் “நித்திய ஜீவன்”

### “LIFE IN YOU” AND “ETERNAL LIFE”

மனுஷ குமாரனின் அடையாளமான மாம்சத்தையும் இரத்தத்தையும் புசிக்கிறவர்கள் நமக்கு கொடுக்கப்பட்ட தலைப்புப்படி “உங்களுக்குள்ளே ஜீவனையும்” “நித்திய ஜீவனையும்” சுதந்தரிப்பார்கள். “உங்களுக்குள்ளே ஜீவன்” என்பது அழியாமையைக் குறிக்கிறது. இவர்கள் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அங்கத்தினர்களாக தெரிந்தெடுக்கப்பட்டு, அடையாளமான மாம்சத்தையும் இரத்தத்தையும் புசித்ததால் இவர்களுக்கு தெய்வீக நிலையாகிய அழியாமை கொடுக்கப்பட்டுவிட்டது. (1 கொரி. 15 : 53, 54; 2 பேது. 1 : 4). இந்த முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்கள் மேல் இரண்டாம் மரணத்துக்கு அதிகாரம் இல்லை. (வெளி. 20 : 4, 6) இவர்கள் மரணம் அடைய முடியாத சாவாமையை அதாவது நமக்கு கொடுக்கப்பட்ட வாக்கியத்தின்படி “தன்னில் தானே ஜீவனைப்” பெற்றவர்கள். அவருடைய சரீரமாகிய சபை அங்கத்தினர்களாக அவர்கள் “கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக மாம்சத்திலே நிறைவேற்றுகிறார்கள்” (கொலோ. 1 : 24) அவர்கள் கிறிஸ்துவோடே விசுவாசமுள்ளவர்கள்ப் பாடுபட்டதினால் அவரோடே கூட ஆளுகையும் செய்ய தகுதிப்படுத்தப்பட்டார்கள். (2 தீமோ. 2 : 12; ரோம. 8 : 17; வெளி. 2 : 10; 5 : 10)

சிறுமந்தையைத் தவிர மற்றவர்கள் வசனம் 53-ல் குறிப்பிடப்பட்ட “உங்களுக்குள்ளே ஜீவன்” என்கிற அழியாமையை சுதந்தரிக்க மாட்டார்கள், ஆனால் வசனம் 54-ல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட “நித்திய ஜீவனைச்” சுதந்தரிப்பார்கள். நமது கர்த்தருடைய வார்த்தைகள் நிறைய இடங்களில் மிகவும் பரந்ததாக சபையை மட்டும் அல்லாமல் திரள்கூட்டத்தாரையும் (வெளி. 7 : 9-17) மற்றவர்களையும் (யோவா. 14 ; 2) உட்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. இவ்விஷயம் தேவனுடைய மகா ஞானத்தை காட்டுகிறது.

தங்களை தேவனுக்கென்று பலியின் உடன்படிக்கை செய்தவர்களில் சிலர் தெய்வீகத் தன்மையாகிய மரணமடைய முடியாத அழியாமையைப் பெறமாட்டார்கள். இவர்கள் தான் தரள் கூட்டத்தார், இந்த வகுப்பார் மகா உபத்திரவத்தின் வழியே வந்து ஆவிக்குரிய நிலையில், சிறுமந்தைக்கு அடுத்த நிலையான நித்திய ஜீவனை அடைந்தார்கள் (வெளி. 7 : 9, 14). இவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றார்கள். ஆனால் அழியாமையைப் பெறவில்லை. அதேபோல் இது மூப்பரான விசுவாசிகளுக்கும் இங்கே சுவிசேஷ யுகத்தின் முடிவில் தேவனிடம் விசுவாசமுள்ள ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டையாளர்களுக்கும் பொருந்தும்.

பூமிக்குரிய ராஜ்யம் ஏற்படுத்தி முடிக்கப்பட்ட பின்பு, பூமியில் உள்ள மனுக்குலம் அனைத்தும் கர்த்தரைக் குறித்த அறிவிற்குள்ளும் அவருடைய சத்திய திற்குள்ளும் கொண்டுவரப்படுவார்கள். (1 தீமோ. 2 : 3-6; ஏசா. 11 : 9; எரே. 31 : 34) ஆதாமுக்காகவும் அவன் சந்ததிக்காகவும் இயேசு கொடுத்த சிறந்த ஆயிர வருட யுகத்தின் நியாயத்தீர்ப்புக்கும் இழந்து பனோதை திரும்பக் கொடுப்பதற்கு அவர்களை கொண்டு வந்து நிறுத்தும்.

அவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் புசிப்பதினால் அவருடைய பரிபூரண மனுஷீகத்தை (அவருடைய ஜீவன் ஜீவிப்பதற்கான உரிமை (மத். 25 : 46; ரோம. 5 : 21; 6 : 23) இழந்து போனதைத் திரும்பப் பெற போகிறவர்கள். தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்கிறார்கள். யோவா. 6 : 51-ல் எழுதியிருக்கிறபடி “இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்” மற்றும் (வசனம் 57) “என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.” அவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள் (தன்னில்தான் ஜீவனை அல்ல) ஜீவனை அளிப்பவராகிய கிறிஸ்துவின் மேல் கீழ்ப்படிதலுடன் சார்ந்திருப்பவர்களுக்கு இந்த வகையான ஜீவன் வழங்கப்படும். தலையையும், சரீரமுமாகிய கிறிஸ்து அழியாமையையும் தன்னில் தானே ஜீவனும் உள்ளவராய் நிறைவேறுதலான இரண்டாம் ஆதாமும் ஏவாளும் ஆகி உலகிற்கு ஜீவனைக் கொடுக்க காரணமாகிறார்கள் (1 கொரி. 15 : 45-49)

## “நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்”

### “I WILL RAISE HIM UP AT THE LAST DAY”

நமது வாக்கியத்தின் இறுதியான வார்த்தைகளில் அடையாளமாக மாம்சத்தையும், இரத்தத்தையும் புசிக்கும் அனைவருக்கும் இயேசு ஆசீர்வாதமும் இருதயத்துக்கு உற்சாகம் தரும் வாக்குத்தத்தத்தைத் தருகிறார். மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்ற ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தைப் பெற்றதினால் அவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள், அழிவற்ற ஆத்துமாவைப் பெறப் போவது இல்லை (வேதாகமத்தைப் பொறுத்தவரையில் மனித ஆத்துமா அழிவற்றது அல்ல எசே. 18 : 4, 20) இந்த வாக்குத்தத்தம் இல்லாவிட்டால் அவர்கள் மரணத்தில் அழிந்திருப்பார்கள் (1 கொரி. 15 : 18) கிறிஸ்துவின் மீட்பு வேலையினால் மரணமானது ஒரு தூக்க நிலையாகும், அவர் குறித்த காலம் வரும்பொழுது பிரேதக் குழியில் உள்ள அனைவரையும் எழுப்புவார். (யோவா. 5 : 28, 29). நாம் ஏற்கனவே படித்த வேதத்தின் காலக் கணக்குபடி, மரித்தோர் உயிர்த்தெழும் காலம் ஏழு ஆயிர வருட நாட்களின் “கடைசி நாளாகும்”. முதலாம் (விசேஷித்த) உயிர்த்தெழுதலின் உன்னதமான ஆவிக்குரிய நிலையான கிறிஸ்துவின் மனவாட்டி வகுப்பாரான சிறுமந்தை உயிர்த்தெழுப்பப்பட்டு, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் பெற்றார்கள். இந்த ஆவிக்குரிய உயிர்த்தெழுதலில் தோழி வகுப்பாரான திரள் கூட்டத்தாரும் பங்கு பெற்றார்கள். ஆனால் இவர்கள் தெய்வீக தன்மைக்கு குறைவாக இருப்பார்கள். மனுஷீக நிலையில் பூரண சக்தி கொண்டவர் களான விசுவாசிகள் சீக்கிரத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டு பூரண குணத்தை வெளிப்படுத்துவார்கள். பின்னர் உலகின் மனிதவர்க்கம், எவ்வாறு அவர்கள் மரித்தார்களோ அவ்வாறே உயிர்த்தெழுப்பப்பட்டு ஆயிர வருட யுகத்தில் படிப்படியாக வளர்ந்து பரிபூரண நிலையை அடைவார்கள். வளர்ச்சி அடைய மறுப்பவர்கள் அனைவரும் ஆயிர வருட முடிவில் உள்ள பரீட்சையில் அழிக்கப்படுவார்கள் (ஏசா. 65 : 20) வெளித்தோற்றத்துக்கு மட்டும் கீழ்ப்படிகிறவர்கள் ஆயிர வருட முடிவில் அழிக்கப்படுவார்கள். (அப். 3 : 23; வெளி. 20 : 7-9)

இயேசுவினுடைய மீட்கும் பலியின் பலனாக வரும் இந்த ஆச்சரியமான ஆசீர்வாதத்தைக் கருத்தில் கொள்ளும் போது அவருடைய மாம்சமே மெய்யான அப்பம் என்றும் இரத்தமே மெய்யான பானம் என்றும் நாம் நிச்சயமாகவே கூறுவோம். நித்திய ஜீவனுக்கு வழிநடத்தக் கூடிய இந்த உன்னதமான ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள நமக்கு உரித்தாக்கிக்கொள்ள அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் தொடர்ந்து புசித்தும் பானம் பண்ண தேவன் நமக்கு உதவி செய்வாராக!

# சிந்தித்துப் பார்!

THINK!

*அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான். - (நீதி. 23 : 7)*

ஒப்பிட்டுப் பார்க்கையில், கற்றவர்கலானாலும் விஞ்ஞானிகலானாலும் சிலர் மாத்திரமே மனதிற்கு இருக்கிற மிகப் பெரிய வல்லமையைப் பாராட்டுவார்கள். அத்துடன் அதற்கு நம்முடைய அன்றாட வாழ்வில் வரும் எல்லா அலுவல்களிலும் அதற்கு இருந்துவரும் சக்தி வாய்ந்த செல்வாக்கை அறிவார்கள். சில தாய்மார்கள் தான் தங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தையை தங்களின் எண்ணங்களின்படி, அதற்கு ஏற்ப உருவாக்க இயலும் என்கிற கருத்தை தெளிவாக புரிந்து கொள்வார்கள் – தனது சிந்தையால் தனக்குப் பிறக்கப்போகிற குழந்தைக்கு நலமானதையோ அல்லது பாதகமானவற்றையோ கொடுக்க இயலும் என்பதை அறிவார்கள். சில தகப்பன்மார்கள் மாத்திரமே இதனை அறிவர். தங்களுக்கு உயர் பண்புகள் கொண்ட பிள்ளைகளை அடைவதற்கு தங்கள் மனைவியோடு இசைந்து செயல்படுவதற்கு நாடுவார்கள். அதாவது தங்களின் மனைவியர்கள் கர்ப்பம் தரித்திருக்கும் காலங்களில் கணவன்மார்கள் உயர் சிந்தனைகளை அவர்களின் மனதில் தூண்டிவிடுவார்கள். அவர்கள் உயர் ஆசைகளை, உயர் கருத்துகள் அடங்கிய அழகு சாதனங்கள், கலை, தாய்மை, பக்தி, ஆவிக்குரிய சிந்தனைகள் ஆகியவற்றை மனதில் உருவாக்குவார்கள். இவ்வாறு ஜனங்கள் ஒரு தாயின் மனத்திற்கு நல்ல குழந்தைகளையோ, துஷ்ட குழந்தைகளையோ உருவாக் குவதற்குரிய திறன் உண்டு என அறியும் அறிவை அறிந்து கொள்வார்களே யாகில் நிச்சயமாக எந்த வித சந்தேகமுமின்றி எல்லா இல்லங்களிலும் நல்லதோர் மாற்றத்தைக் கொண்டுவர இயலும். எங்களின் திடநம்பிக்கை என்னவென்றால் பெரும்பாலான மக்கள் நன்மைக்கேதுவான சரியான முறையை கையாடுவார்கள். தவறான முறைக்கு போக மாட்டார்கள். இவ்வாறு அநேகரை இந்நிலைக்கு வர விடாமல் அவர்களிடையே இருந்துவரும் முக்கிய கஷ்டங்களும் அவர்களுக்கு தடை கல்லாக இருந்து வருவதும் அவர்களுடைய அறியாமையே ஆகும்.

> *கடைசியாக, சகோதரரே,*
> *உண்மையுள்ளவைகள் எவைகளோ,*
> *ஒழுக்கம் உள்ளவைகள் எவைகளோ,*
> *கற்புள்ளவைகளெவைகளோ,*
> *அன்புள்ளவைகளெவைகளோ,*
> *நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ,*
> *புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ*
> *அவைகளையே சிந்தித்துக்*
> *கொண்டிருங்கள்.*
> *பிலிப்பியர் 4 : 8*

ஆனால் ஒரு விதத்தில் மனுக்குலத்தின் மேல் பொதுவாக தயவு இருந்தாலும் நாம் ஒன்றை மறந்து விடக்கூடாது. வேதாகமம் தேவனுடைய பிள்ளைகளுக்கு மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் மூலம் விசேஷித்த முறையிலே தேவனுடன் ஓர் உடன்படிக்கைக்குள் வந்திருக்கின்றனர். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஜெனிப்பிக்கப்படுவதின் மூலம் அவர்கள் தேவனுடைய சிறந்த ஜனங்களாக ஆகிறார்கள். உலகத்தார் ஆயிர வருட காலத்தின்போது எவ்வாறு முன்னேறுவது குறித்துப் போதிக்கப்படுவார்கள். ஆனால் கிறிஸ்தவ யுகத்தின் போது இவ்வாறு தங்களை திடப்படுத்திக் கொள்வதற்குரிய வாய்ப்பு திருச்சபை அங்கத்தார்களுக்கு மாத்திரமே, இந்த பூமியில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்டதோர் வாய்ப்பு இவர்கள் தங்கள் ஜீவிய ஓட்டத்தை இங்கே முடித்து தங்களுக்கு விடுத்த அழைப்பில் வெற்றியும் பெற்றுவிட்டார்கள். அவர்களின் தெரிந்தெடுப்பு ஊர்ஜிதமாகிவிட்டது. அவர்கள் இப்போது ஆவிக்குரிய ராஜ்யத்தில் அவர்களுக்குரிய ஸ்தானங்களில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

## சிந்தனையில் அடங்கியிருக்கும் சக்தி

### THE POWER OF THOUGHT

அப்போஸ்தலர்களின் புத்திமதியை ஒவ்வொரு தனி நபருக்கும் கொடுக்கும் ஆலோசனையாக எடுத்துக் கொள்ளலாம். அதே சமயத்தில் அனைத்து திருச்சபைக்கும் கொடுக்கும் புத்திமதியாகவும் கருதலாம். ஒவ்வொருவரையும் மிகவும் உயர்ந்த பரிசுத்த விசுவாசத்தில் ஒருவருக்கொருவர் தங்கள் ஜீவியத்தை கட்டிக்கொள்ள இது உதவும். அந்த அடிப்படையில்தான் இந்த பொன்னான தலைப்பு வாக்கியத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தன்னுடைய சொந்த மனதை குறித்த பராமரிப்பு ஒவ்வொரு தனிநபரின் பொறுப்பு ஆகும். கிறிஸ்தவர்களாக வருவதனால் நாம் நம்முடைய சுய சித்தத்தை ஆண்டவரிடம் கொடுத்து விடுகிறோம். அதுமட்டுமல்ல இது முதற்கொண்டு நம்முடைய சித்தத்திற்கு கீழ்படிந்து நடவாமல் அவர் சொற்படி நடப்போம். நம்முடைய சுய சித்தங்களை ஒதுக்கிவிட்டு நமதாண்டவரின் வழிநடத்து தலுக்கு ஏற்ப அவர் சித்தப்படி அவருக்குப்பின் செல்வோம். இப்படிப்பட்டதோர் நிபந்தனையின் அடிப்படையில்தான் நமதாண்டவர் நம்மை அவருடைய குடும்ப அங்கத்தினராக நம்மை ஏற்றுக்கொண்டிருக்கிறார். எவரேனும் இந்த உடன்படிக்கையின் விதி முறைகளுக்கு விரோதமாக செயல்படுவாரேயாகில் அவர்கள் உடன்படிக்கையை உடைத்தவராக கருதப்படுவர். நமதாண்டவர் அவருடைய வார்த்தையின் மூலமாக நமக்கு தேவையான உபதேசங்களைப் புகட்டி வருகிறார். அவர் என்ன சித்தம் கொள்கிறாரோ அதன் அடிப்படையில் நமக்கு உபதேசங்களை கொடுத்து வருகிறார். இவ்விதமாக கொடுக்கப்படும் செய்திகள் செம்மையும் உண்மையும் கொண்ட உள்ளங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதன் பலனாக கீழ்ப்படிதலின் கனிகள் கிடைக்கின்றன. இதன் மூலமாக அவைகள் ஆவியின் கனிகளை விருத்திசெய்து கொள்ள வழிகாட்டுகிறது.

அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான். அநேக கிறிஸ்தவர்கள் தங்களின் கிரியைகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும்

சிற்றின்ப போராட்டங்களிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ளவும் கற்றிருக்கிறார்கள். ஓர் அளவிற்கு அநேகர் தங்கள் நாவினை கட்டுக்குள் வைத்திருக்கவும் கற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றை எப்போதும் தங்கள் நினைவில் வைத்துக் கொள்வர். தேவனை துதிக்க பயன்படுத்தும் அதே நாவைக் கொண்டு யாத். 31 : 10-ல் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறபடி தன் உடன் இருக்கும் இதர சிருஷ்டிப்புகளை தூஷிக்கவும் கூடும் என்பதை அறிவார்கள். ஆனால் குணநலன்களைக் கட்டுப்படுத்துவதோ. வார்த்தைகளை தக்க விதமாக உபயோகிக்க முயல்வதோ, கடிமையான செயல், இதற்கு நம் மனம் உதவ முன் வராவிட்டால் இவற்றை கடைபிடிப்பது கூடாதது ஆகும். மனமும் சித்தமும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக கொண்ட வர பட வேண்டும். எனவே தான் தேவன் எதனை வேண்டுமென கருதுகிறார் என்பதனை காரணங்களின் முலம் நமக்கு காண்பிக்கிறார். அத்துடன் அதற்காகவே நமக்கு முன்பாக மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை அருளியிருக்கிறார். இவைகள் நம்மில் கிரியைச் செய்யும்படிக்கு நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. அவைகள் நம் உள்ளங்களில். நம் மனதில் கிரியைச் செய்ய வேண்டும். அவைகள் நம் வாக்கிலும் செயலிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். அதுவும் நம் ஆண்டவரின் மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்க கூடியதாக இருக்க வேண்டும். அதுவே நம் ஆண்டவரின் சித்தமுமாயிருக்கிறது.

## நம்மை நாமே சோதித்தறிவதற்கு ஏற்ற கேள்விகள்
### QUESTIONS FOR SELF-EXAMINATION

அப்போஸ்தலர் நமக்கு அளித்திருக்கும் தங்க வாக்கியத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளைச் சுட்டிக்காட்டுகிறார். அதன்படி நம்மை நாமே நம் சிந்தனைகளையும், நம் வார்த்தைகளையும், நம் நடத்தைகளையும் கட்டுக்குள் கொண்ட வர வேண்டும். நம் ஒவ்வொரு சிந்தையையும் நன்கு பரிசோதிக்க வேண்டும். அது உகந்ததா இல்லையா என்று நாமே நம் மனதில் சோதித்து அறிந்து கொள்ள வேண்டும். ஒரு வேளை ஒரு பொல்லாத சிந்தனையோ அல்லது கீழ்தரமான கருத்தையோ நம் மனம் ஏற்றுக்கொள்ளுமேயாகில், அது முளைவிட ஆரம்பித்துவிடும். சிறுகச் சிறுக வளர்ச்சி அடைய ஆரம்பித்து நம் வார்த்தைகளும் நம் குணநலன்களும் பாதிக்கப்படும் அளவுக்கு மிகப் பெரிய கேட்டை விளைவிக்கும். இவை நம்மூலம் மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளும். நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வழிமுறைகளைக் கடைபிடித்து உடனுக்குடன் அவை உகந்ததா இல்லையா என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதன் வழிமுறைகளை இந்த பாடத்தின் மூலம் அப்போஸ்தலர் எழுதி வைத்திருக்கிறார். அதில் முதலாவதாக தேவைப்படுவது நம்முடைய எண்ணங்களை நன்கு ஆராய்ந்து ஓர் நல்ல முடிவிற்கு வருவதற்கு தேவையான நேரத்தை அதற்கு ஒதுக்க வேண்டும். இவ்வாறு இந்த தொடர்ச்சியான பயிற்சியின் மூலம் நாம் முடிவுகளை உடனுக்குடன் எடுக்க முடியும்.

**(1)** முதலாவதாக நம்மனதில் உதிக்கின்ற எண்ணங்கள் நம் உள்ளங்களில் நன்மதிப்பை பெறுவதற்குரிய ஒன்றாக இருக்கிறதா என அறிய வேண்டும். அப்படியென்றால் அதனை நமது மனம் ஏற்றுக் கொள்ள அனுமதிக்கலாம். அதன் பிற்பாடு அதனை ஊக்குவிக்கலாம், அதற்கு மாறாக அது ஓர் விரும்பத்தகாத சிந்தனையென்றால் உடனடியாக அதனை கடிந்து கொண்டு அந்த சிந்தனையை அப்புறப்படுத்தி விட வேண்டும். நம் மனதிலிருந்து அகற்றி விட வேண்டும். அதனால் நமக்கு தீங்கு உண்டாகும் என்பதை அறிந்து ஒரு சத்துருவை விரட்டுவதுபோல் விரட்டி விட வேண்டும்.

**(2)** ஒருவேளை அந்த சிந்தனை சிற்றின்பங்களை தூண்டுவதாகவோ சுயநலமானதாகவோ இல்லாமல் தூய்மையான ஒன்றை குறிப்பிடுகிறதா என ஆராய வேண்டும். இப்படி சோதித்தறிந்த பிற்பாடு அது நலமுடையது என கண்டால் அது மேலும் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கலாம். இவ்வாறு அதற்கு அளிக்கும் சோதனையின்போது தூய்மை அற்றது என நிரூபிக்கப் பட்டால் அதனை உடனே கடிந்து கொள்ளப்பட வேண்டியது அவசியம். அதனை நம் மனதில் வளர விடாதபடிக்கு அந்த சிந்தனையை புறம்பே தள்ளிவிட வேண்டும். அது ஒருவேளை மிகப் பெரிய கேட்டை விளைவிக்கலாம். நம்முடைய வீடுகளில் தொற்று நோய் புகுந்துவிட்டால் அது வீட்டில் உள்ள எல்லா பொருட்களையும் பாதிப்பது போல் இந்த தீய சிந்தனை உடனே அகற்றாவிட்டால் பெரும் தீங்கு விளைவிக்கும்.

**(3)** அந்த சிந்தனை நேசிக்க கூடியதா என கண்டறிய வேண்டும். இது நாம் அன்பு பாராட்டும் பொருட்களுடன் தொடர்புடையதா எனக் கண்டறிய வேண்டும். அது நம் குணநலன்களை கட்டி எழுப்புவதற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கி கொடுக்குமா அல்லது ஏதோ ஒரு விதத்தில் நாம் வெறுக்கத்தக்க விதத்தில் இருக்கிறதா என கண்டறிதல் வேண்டும். பகைமை, எரிச்சல், கோபம், இழிவான செயல் ஆகியவற்றோடு இதற்கு தொடர்போ உறவோ இருக்கிறதா என அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இவற்றுள் நல்ல சிந்தனையை தூண்டிவிடுவதற்கு அம்சங்கள் அமைந்திருக்குமேயாகில் அது மேலே கடந்து செல்ல அனுமதிக்கலாம். இல்லையேல் அதனை உடனே அப்புறப்படுத்தியாக வேண்டும். அது தொடர்ந்து மேலே போக அனுமதிக்க கூடாது. நமக்கோ பிறருக்கோ அது தீங்கு விளைவிக்குமேயாகில் மேலும் மேலும் முன்னேறிச் செல்ல அனுமதிக்க கூடாது.

**(4)** அது பாராட்டப்படக் கூடியதா? என கண்டறிதல் வேண்டும். அப்படியென்றால் இது உலகத்தாரால் நன்கு பேசப்பட்டு வருகிறதா என அர்த்தம் கொள்ளக்கூடாது. ஏனெனில் அப்போஸ்தலர்களும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டனர். நிந்தித்துத் துன்பப்படுத்தி பல வித தீமையான மொழிகளையும் பொய்யாய் சொன்னார்கள். ஆகவே பாராட்டுதற்குரியது என்று சொல்லப்படும் கருத்தை அர்த்தப்படுத்தும் போது உயர்ந்த மதிப்புமிக்க ஜனங்களால் அது பாராட்டிற்குறியதாக இருந்ததா எனக் கண்டறிய வேண்டும். அது பற்றிய யாவும் அவர்கள் அறிந்திருக் கிறார்களா, அந்த பாராட்டுதற்குரிய கருத்துடன் சம்பந்தப் பட்டவை ஒவ்வொன்றையும் அவர்கள் நன்கு அறிந்தவர்கள் தானா என அறிதல் வேண்டும்.

**(5)** அந்த சிந்தனைக்கு ஏதாவது நற்பண்புகள் உண்டா என அறிதல் வேண்டும் அல்லது அது வேறு எந்த விதத்திலாவது பாராட்டுதற்குரிய தகுதியை பெற்றிருக்கிறதா என அறிதல் வேண்டும். அப்படியென்றால் அச்சிந்தனையை நம் மனம் ஏற்றுக் கொள்ள அனுமதிக்கலாம். அப்படியில்லையென்றால் அதனை உடனே வெளியே

தள்ளிவிட வேண்டும். ஒருவேளை அது மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்காது இருப்பினும் அதற்கு எந்தவித அனுகூலமும் இல்லாததே அதனை வேண்டாம் என தவிர்ப்பதற்குரிய காரணம் ஆகும். வெறுமனே அவைகளில் தீங்கு எதுவும் இல்லை என்றாலும் அது போன்றவற்றிற்கு நம் காலத்தையும் இடத்தையும் அவைகள் வீணாக்க அனுமதிக்கக்கூடாது. நன்மைக் கேதுவான காரியங்களை நம் இருதயங்களில் குடிகொள்ள விரும்ப வேண்டும். அவற்றினால் நேரடியாக நன்மை ஒன்றே கிரியைச் செய்யும் தன்மைப் பெற்றிருக்க வேண்டும். அவைகள் ஏதாவது ஓர் விதத்தில் உதவியாகவும் நன்மை பயக்குபவைகளாக இருக்கும். அப்படியில்லையேல் அது போன்ற கருத்துக்களை எப்படியாவது அகற்றிவிட வேண்டும். அது நம் இருதயங்களுக்கும் மனதிற்கும் உபயோகமற்ற மேலும் ஓர் சுமையாக இருந்தல் கூடாது. உதாரணத்திற்கு அதிகப்படியான கதை புத்தகங்களைக் கூறலாம். அது தாமே தீமையானது அல்ல ஆனால் அவற்றால் நமக்கு சாதகமான பலன்கள் எதுவும் ஏற்பட போவதில்லை. தேவனை திருப்திபடுத்த தேவையான குணநலன்களை நாம் மேன்படுத்திக் கொள்ள அவைகள் எவ்விதத்திலும் உதவப் போவதில்லை. அது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

இயல்பாக நாம் எப்படிப்பட்டவராக இருந்தாலும், தேவனுடைய ஜனமாக விளங்குபவர்கள், தேவனால் அருளப்பட்ட தெய்வீக வார்த்தையால் வரும் உபதேசங் களைப் பின்பற்றுவார்கள். அப்படிச் செய்பவர்கள் முன்னிலும் அதிக மேன்மையுடைய ஜனங்களாக விளங்கு வார்கள். மற்ற ஜனங்களுக்கு உதவுபவர்களாகவும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையுடையவர்களாகவும் இருப்பார்கள். இவைகளே அவர்களை ராஜ்யத்திற்கும் மீட்பரும் தலையுமானவரின் கீழ் தேவனுடைய ஊழியக்காரர்களாக அவர்களிடம் நம்பி கொடுக்கப்பட இருக்கும் மகா சிறந்த எதிர்கால ஊழியங்கள் சம்பந்தமான ஆயத்த வேலைகளுக்கு இவை இன்றியமையாத பகுதியாகும். வரப்போகிற ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியில் நம்முடைய பங்கும் அதில் இருப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்தி கற்றோராகவும், போதிக்கப்பட்டவர்களாக வும், தேவனுடைய ஊழியக்காரர்களாக பிரகாசிக்கப்பட்டவர் களாகவும் (enlightened) இருக்க நாடுவோமாக.


# தேவனுடைய கட்டளைகளை பின்பற்றுங்கள்!

## FOLLOW GOD'S COMMANDS!

*அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால், ஊசா தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான். அப்பொழுது கர்த்தருக்கு கோபமூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான்.*

2 சாமு. 6 : 6, 7; 1 நாளா. 13 : 9, 10

ஆசாரியர்கள் மட்டுமே ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று உடன்படிக்கை பெட்டியை ஒரு குறிப்பிட்ட வகையில் மூட வேண்டும் என்பது தேவ வழிநடத்துதல் ஆகும். இது தற்கால போதனைக்கும் அடையாளமாக உள்ளது. லேவியர்கள் மட்டுமே அதன் மேல் அக்கறை கொண்டு அதைத் தங்கள் தோளின் மேல் சுமக்க வேண்டும் (எண். 7 : 9) இந்தக் காரியங்களைப் புறக்கணித்து தாவீது ராஜா, ஒரு வண்டியை உருவாக்கி, வண்டியை இழுக்க காளை களைப் பயன்படுத்தினான், இதுவே உடன்படிக்கைப் பெட்டியை நகரத்திற்குள் கொண்டு செல்ல மதிப்பான வழி எனக் கருதினான். ஆனாலும் அது தேவனுடைய வழி அல்ல; அதனுடைய கிருபாசனம் அன்பு, நீதி, ஞானம், வல்லமை என்ற குணங்களைக் குறித்துக் காட்டு கிறது. தேவனையும், பெட்டியையும் பற்றிய பயபக்தியை உணர்த்த ஒரு பாடம் கொடுக்கப்பட வேண்டியதிருந்தது.



பெட்டியை நகர்த்த உகந்த நேரம் வந்தது, கொண்டாட்டமும் துவங்கின. பெட்டியை இழுத்துச் சென்ற காளைகள் வழவழப்பான, சரிவான, கற்கள் நிறைந்த பகுதியில் செல்லும்போது பெட்டி தடுமாறி லேசாகச் சாய்ந்தது. அப்பொழுது ஊசா தன் கையை நீட்டி பெட்டியைத் தாங்க முற்பட்ட உடனேயே அவனுக்கு மரணம் ஏற்பட்டது. இவ்வாறு நடைமுறையில் தேவ அதிருப்திகரு ஆளானதால், எல்லாவிதமான கொண்டாட்டமும் உடனடியாக முடிவுக்கு வந்தது. மேலும் தாவீது ராஜா, சிறிய காரியமும் பெரிய தீங்கை ஏற்படுத்தும் என்று கருதி பெட்டியை தன் அருகில் கொண்டு வர மிகவும் பயந்தான். அந்த ஊர்வலம் நிறுத்தப்பட்டது. பயணம் வேறு பக்கமாக திரும்பி. கர்த்தருடைய பெட்டி ஆசாரியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டில் தற்காலிகமாக வைக்கப்பட்டது. (2 சாமு. 6 : 9-11). சிறிது காலத்திற் குப் பின் தாவீது ராஜா கர்த்தருடைய பெட்டியை அங்கிருந்து எருசலே முக்குக் கொண்டு செல்லுகையில், தேவன் நியமித்தபடி, பெட்டியை லேவியர்களே சுமந்து கொண்டு வரும்படி செய்தான். (2 சாமு.6 : 12; 13; 1 நாளா.15 : 1, 2)

இதன் விளைவாக கீழ்ப் படிதலை விளக்கக்கூடிய பயபக்தி யான பாடத்தை ஜனங்கள் கற்றுக் கொண்டார்கள். இந்தப்பாடம் தற்காலத்திலும், எல்லாக் காலத்திலும் மிகவும் அவசியம் எனக் காணப்படுகிறது. அலட்சிய குணம் உலகத்தாரால் அடிக்கடி வெளிப்படுத்தப் படுகிறது; ஆனால் தேவனுக்கென்று தங்களைப் பிரதிஷ்டை செய்த ஜனங்களிடம் தேவ பக்தி குறைவு படுவதாக நாம் காணும்போது இது நம்மை அவ்வளவாக பிரம்மிப்படைய செய்யாது. அது சில நேரங்களில் அலட்சியமான விதத்திலும் செயலிலும் இருப்பதின் மூலம் வெளிப்படுத் தப்படுகிறது. சில சமயங்களில் அது ஞானத்தை வெளிப்படுத்தும் பேச்சிலும் இருக்கும். அதுபோல நமது

எண்ணங்களிலும் பயபக்தியின்மை காணப்படுகிறது. நாம் பரிசுத்தமான காரியங்களை சாதாரணமாக கருதக்கூடாது. அவ்வாறு நடந்தால் கண்டிப்பாக அதன் விளைவுகள் நமக்கும் பிறருக்கும் தீங்கு விளைவிக்கும்.

மரணம் வாழ்க்கையின் முடிவு என்றும் ஆனால் அது ஒரு முடிவில்லாத வாழ்க்கைக்கு உள்ளே செல்லும் வழி அல்ல என்றும் வேதத்தின் போதனைகளைக் கண்டுகொண்டவர்களுக்கு ஊசாவின் நடத்தையை தேவன் நியாயந்தீர்த்து அவனை தேசத்துக்கு முன்பாக ஒரு மாதிரியாக வைத்ததைப் பற்றி விளக்க வேண்டிய தேவையில்லை. இதனால் ஊசாவின் நடத்தையால் தேவனுடைய புத்திமதிகளை பின்பற்றுவதின் முக்கியத்துவம் இஸ்ரவேலர்களுக்கு போதிக்கப்பட்டது. கூடுதலாக, ஊசாவுக்கு வரப்போகிற நித்திய ஜீவியத்திற்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை என்பதை நாம் அறிந்து கொண்டோம். ஊசா மீட்கும் பொருள் கொடுக்கப்பட்ட காலத்திற்கு முன் வாழ்ந்தான், மேலும் அவன் மனுக்குலத்தின் ஓர் அங்கத்தினராய் இருக்கிறான், இந்த மனுக்குலத்திற்காகவே நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது ஜீவனை ஈடுபலியாக கொடுத்தார். முடிவாக ஊசா மனுஷகுமாரனின் சத்தத்தைக் கேட்பவர்களில் ஒருவனாக மகா உயிர்தெழுதலின் போது மரண நித்திரையிலிருந்து எழும்பி வருவான். (தானி. 12 : 12; யோவா. 5 : 28, 29) - இதற்குரிய சாட்சி தேவனுடைய "ஏற்ற காலங்களில்" அவனுக்கு விளங்கும். (1 தீமோ. 2 : 3-6.)

### தேவனுடைய இரக்கம்

**GOD'S MERCY**

தேவன் நம்முடைய மனுக்குலம் முழுவதற்கும் இரக்கமுள்ளவராய் இருந்து, விலையேறப்பட்ட இரத்தத்தின் மூலம் நம்மை மீட்டுக்கொண்டார். வேதத்தின் போதனையாக உயிர்த்தெழுதலை அசட்டை செய்பவர்களும். மரித்தோர் உயிர்தெழமாட்டார்கள் என்று வாதிடுபவர்களும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். மரித்தவர்கள் மரணத்திற்கு பின் பூமியில் இருக்கும்போது ஜீவனோடு இருந்ததைவிட அதிகமாக ஜீவனோடு இருப்பார்கள் என்பது அவர்களுடைய கருத்தாகும். ஆகையால் அவர்கள் ஊசா உடனடியாக பிசாசுகளின் கைகளில் நித்திய வேதனை அனுபவிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டான் என்றும் நினைகின்றனர். அதின்படி பார்த்தால் இந்த பகுதி கலககமுறச் செய்வதாகவும் கடுமையான அநீதியாகவும் காணப்படும். தேவனுடைய குணம் மற்றும் தேவ ஏற்பாட்டின் மீது இப்பொழுது தெளிவான வெளிச்சம் பிரகாசித்துக் கொண்டிருப்பதால் நாம் தேவனுக்கு நன்றி கூறுவோம். நமது தேவன் அன்பான தேவன். உயிருள்ள ஜனங்களை எரிக்கவோ துன்பப்படுத்தப்படவோ ஒப்புக் கொடுப்பவர் அல்ல. இந்த கொடூரமான தப்பறை எதிராளியாகிய சாத்தானுடைய கலையாகும். அவன் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று ஆதி முதற்கொண்டு கூறிக்கொண்டு வருகிறான். (ஆதி. 3 : 4) தேவன் இஸ்ரவேலரிடம் தங்கள் உயிருள்ள குழந்தைகளை புறமத தெய்வங்களாகிய மோளோகுக்கும் பாகாலுக்கும் நெருப்பில் சுட்டெரித்து பலியிடக் கூடாதென்று கட்டளையிட்டுள்ளார். "நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோளேகுக்கென்று தீக்கடக்கும்படி இடங்கொடாதே. உன் தேவனுடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்காதே. நான் கர்த்தர்" என்று கூறுகிறார். (லேவி. 18 : 2; 20 : 2-5; 1 ராஜா. 11 : 7-10; 2 ராஜா. 23 : 10.

## மேசியா தேவனுடைய தாசன்
# ஏசாயா தீர்க்கதரிசனத்தின் மையக் கருத்து
**Messiah - God's Servant THE HEART OF ISAIAH'S PROPHECY**


ஏசாயா 52 : 13—53 : 12-ல் எந்தவித தவறான கருத்துக்கும் இடம் கொடுக்காமல் ஊர்ஜிதமாக தேவனுடைய தாசன் ஓர் தனிப்பட்ட நபர் என சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய தாசனாகிய மேசியா என்ற தனிப்பட்ட நபர் முழு தேசத்தவருக்காகவும் பட்ட பாடுகளை ஆவியினால் ஏவப்பட்ட தீர்க்கதரிசி விவரித்துள்ளார். அந்த மேசியா தேசத்தை குறிக்கவில்லை. இதனை நாம் இங்கு தெளிவுபட காணலாம். உதாரணத்திற்கு **(1)** இந்த தீர்க்கதரிசனப் பகுதியில் அங்கு சொல்லப்பட்டிருப்பவர் ஒரு பாவமும் அறியாத ஒருவர் பாடுகளை அனுபவிப்பதாக கூறப்பட்டிருக்கிறது. "அவர் கொடுமை செய்யவில்லை", "அவர் வாயில் வஞ்சனை இருந்ததில்லை" (ஏசா. 53 : 9) **(2)** அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும் (வசனம் 8) **(3)** "அவர் ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்"(வசனம் 8) **(4)** அவர் மிகப்பெரிய பாவநிவாரண பலியானார். எப்படியெனில் தேவன் நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (வசனம் 6) **(5)** ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார் (வசனம் 7) **(6)** அவர் தம்மைத்தாமே மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தார் - "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்"(வசனம் 12). **(7)** அவருடைய பாடுகள் அவரை மரணத்தின் உச்சிக்கு எடுத்துச் சென்றது "அவர் நீதிமானாக இருந்தாலும் துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்" (வசனம் 9).

நிச்சயமாக இந்த தீர்க்கதரிசனங்கள் எவற்றையேனும் உண்மையிலே ஒரு ஜனமாகிய இஸ்ரவேலரைக் குறிக்கும் என கூற இயலாது. ஆனால் இயேசுவோ தம் ஜனத்தின் மீறுதல்கள் நிமித்தம் வாதிக்கப்பட்டார் (வசனம் 8). இங்கு எபிரேய பதத்தில் வரும் "அம்மி" (ammi) என்கிற வார்த்தையின் பொருள் என் ஜனம் என்பதாகும் (ஓசியா 1 : 9; 2 : 1 உடன் ஒப்பிடுக) இது ஒருமையில் அல்ல பன்மையில் மாத்திரமே உபயோகிக்க முடியும். எனவே இது நபர்களைக் குறிக்கும் - அதாவது ஒரு ஜனத்தாரைக் குறிக்கும். ஆகவே தேவனுடைய தாசன் தமது ஜனத்திற்காக நொறுக்கப்பட்டார் என்றால் அவர் இஸ்ரவேலருக்காக நொறுக்கப்பட்டாரே ஒழிய அவர் தாமே இஸ்ரவேலின் ஜனமாக மாறிவிடவில்லை என்பது தெள்ளத் தெளிவாக இருக்கிறது.

உண்மையிலேயே இஸ்ரவேல் ஜனங்கள் வேறு எந்த தேசத்தாரும் அனுபவிக்காத அளவிற்கு பாடுகளை அனுபவித்திருக்கின்றனர். குறிப்பாக, இவர்கள் புறஜாதியார் மத்தியில் சிதறடிக்கப்பட்டபோது இவர்களின் துயரங்கள் பெரும் அளவில் இருந்தன. (இதில் உலக மகா யுத்தத்தின் இரண்டாம் கட்டத்தின்போது அவர்கள் அனுபவித்த பாடுகளும் அடங்கும்) ஆனால் ஒரு பாவமும்

அறியாத எந்த வித எதிர்ப்பும் செய்யாத தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய அந்த மனிதன் (வசனம் 3) தம் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி னார் ஓர் பாவநிவாரண பலி யாக கொடுத்தார். அவர் தம்மை, அவருடைய ஆத்துமாவை ஓர் குற்ற நிவாரணப் பலியாக ஒப்பு கொடுத்தார். (வசனம் 10) அவர் தன் ஜனத்தின் மீறுதலினி மித்தம் வாதிக்கப்பட்டார் (வசனம் 8)

இஸ்ரவேலர்கள் ஒரு ஜாதியாக முற்றிலும் வித்தியாச மான முறையில் விவரிக்கப்பட் டுள்ளார்கள். இவர்களைக் குறித்து பின்வருமாறு கூறப்பட் டிருக்கிறது பாவமுள்ள ஜாதி யும், அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள். கர்த்தரை விட்டு, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி, பின்வாங்கிப் போனார்கள். "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் கைகள் இரத்ததாலும் உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப்பட்டிருக்கிறது. உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது. (ஏசா. 1 : 1-9; 59 : 1-15) இஸ்ரவேலர்கள் ஒரு ஜனத்தவராக அனுபவித்த பாடுகளை இந்த தனிப்பட்ட நபராகிய எந்த விதப் பாவமும் அறியாத தேவனுடைய தாசனின் பாடுகளோடு நிச்சயமாக குழப்படி செய்யக்கூடாது. தேவனுடைய தாசனின் பாடுகள் ஏசா. 52 : 13 -- 53 : 12 வசனங்களில் விவரிக்கப்பட்டிருகிறது. அதுமட்டுமல்ல இஸ்ரவேலர்கள் ஒரு ஜனத்தவராக பாடுகளை அனுபவித்ததை தண்டனையாக நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அது கர்த்தரின் கையிலிருந்து இரட்டிப்பாய் வந்தவை (ஏசா. 40 : 2) அவற்றோடு தேவன் மோசேயின் மூலமாக தீர்க்கதரிசனங்களின்படி உரைத்த "ஏழத்தனை தண்டனை காலங்களாகும்" (லேவி. 26 : 18-46 அத்துடன் உபா. 28 : 15-68 வசனங்களைப் பார்க்கவும்) (இதன் முழு விவரங்களுக்கு அதாவது "இஸ்ரவேலரின் இரட்டிப்பு", அவர்களின் "ஏழத்தனைக் காலங்கள்" இவற்றிற்கு யூதர்களின் நம்பிக்கையும் எதிர்க்கால பலன்களும் (Jewish Hopes and Prospects) என்கிற சிறிய புத்தகத்தை படிக்கவும்)



இஸ்ரவேலர்கள் புறஜாதியார் மத்தியில் பெற்ற துயரங்கள் ஏசாயா 42 : 22-25 வசனங்களில் கர்த்தரிடத்திலிருந்து அவர்களின் பாவங்களுக்காக கொடுக்கப்பட்ட தண்டனை என காட்டப்பட்டிருக்கிறது. இந்த ஜனமோ கொள்ளையிடப்பட்டும், சூறையாடப்பட்டும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் கெபிகளிலே அகப்பட்டு. காவலறைகளிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். தப்பிவிப்பார் இல்லாமல் கொள்ளையாவார்கள். உங்களில் இதற்குச் செவி கொடுத்துப் பின்வருகிறதைக் கவனித்துக் கேட்கிறவன் யார்? யாக்கோபை சூறையிட்டு இஸ்ரவேலைக் கொள்ளைக்காரருக்கு ஒப்புக் கொடுக்கிறவர் யார்? அவர்கள் பாவஞ் செய்து விரோதித்த கர்த்தர் அல்லவோ? அவரு டைய வழிகளில் நடக்க மனதா யிராமலும் அவருடைய வேதத் துக்குச் செவி கொடாமலும் போனார்களே. இவர்கள்மேல் அவர் தமது கோபத்தின் உக்கிரத்தை ஊற்றினார்.

தேவனால் மேசியாவாக அபிஷேகம் செய்யப்பட்ட அவரது தாசனாக வரும் அந்த தனி நபர் ஒரு பாவமும் அறியாதவர். இஸ்ரவேலரை குறித்த விவரங் களுக்கும் இவரைப் பற்றிய விவரங்களுக்கும் மிகப் பெரிய தோர் வித்தியாசம் இருக்கிறது. இந்த தேவனுடைய தாசனாகிய மேசியாவைக் குறித்து ஏசாயா 42 : 49; 50 : 53 மற்றும் 61 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவரோ எந்தவித மறுப்பும் செய்யாமல் முழு மனதுடனே தம்மைத்தாமே ஒரு பாவநிவாரண பலி யாக ஒப்பு கொடுத்தார். "நம்முடைய மீறுதல்களுக் காக நமக்கு பதிலாக ஓர் நிறைவான பலியை கொடுத்தார். அவர் நம்முடைய மீறுதல்களுக்காக மரிப்பதற்குக் காரணம் நம் எல்லாருடைய மீறுதல்களையும் தேவன் அவர்மேல் சுமத்தினார். அவர் நம்முடைய பாவங்களுக்காக காயப்பட்டார் அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். தேவனுடைய தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். ஏனெனில் அவர் களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார். அவர் நம் அநேகருடைய பாவங்களை சுமந்தார். அவர் நம்முடைய மீறுதல்களுக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். (நிறைவேறுதலான தேவனுடைய கிருபாசனத்திற்குச் சென்று பரிந்துரை செய்கிறார் லேவி. 16 : 14-17)

## ஏசாயா 52 : 13 -- 53 : 12 ஆகிய வசனங்களில் இருக்கும் மூன்று பகுதிகள்

### THREESECTIONS IN ISAIAH 52:13--53:12

ஏசாயாவில் மிக முக்கிய பகுதியான மகா மேசியாவைக் குறித்துக் கூறும் தீர்க்கதரிசனப் பகுதி மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. **(1)** 52 : 13-15 **(2)** 53 : 1-10 **(3)** 53 : 11, 12. இதன் **முதல்** பகுதியில் தேவன் தமது தாசனை அறிமுகம் செய்கிறார் ("இதோ என்னுடைய தாசன் ஏசாயா 42 : 1; சகரி. 3 : 8; 6 : 12, 13; எரே. 23 : 5, 6; 33 : 15 ஆகிய பகுதிகளையும் பார்க்கவும்") இங்கேயும் இந்த முழு தீர்க்கதரிசனத்தின் சுருக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதாவது மேசியா புறக்கணிக்கப்படுவார். பாடுகள் படுவார். இதன் விளைவாக அவர் உயர்த்தப்படுவார். அடுத்து அநேக ஜாதிகளை அவர் ஆசீர்வதிப்பார் என்று இவ்வாறு சிறிய அளவில் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

**(2)** இதன் இரண்டாம் பகுதியில் முக்கியமாக சொல்லப்பட்டிருப்பது எஞ்சியிருக்கும் இஸ்ரவேலர்கள் தாங்கள் செய்த தவறுக்காக மனம் வருந்தி தங்கள் குற்றங்களை ஒப்புக் கொள்ளுதல். அவற்றோடு அவர்களின் நொறுங்குண்ட பணிந்த விதங்களும் சொல்லப்பட்டிருக்கிறது (ஏசா. 57 : 15) இவர்கள் தங்களுக்காகவும் இஸ்ரவேலின் மொத்த ஜனங்களுக் காகவும் மனம் வருந்தி தங்கள் பாவங்களை ஒப்புக் கொள்வார்கள். "நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தை யும் அவர்மேல் விழப்பண்ணினார். (இங்கு அவர்மேல் என்று சொல்லப்பட்டிருப்பது தனி நபரான மேசியாவை) (ஏசா. 53 : 6) அவர்கள் தங்களுக்குரிய இரட்சிப்பையும். அதின் விளைவை உலகத்தார் மேசியாவின் கரங்களிலிருந்து பெற்றுக் கொள்வதையும் அவர்கள் காண்பார்கள். இவ்வாறு ஏசா. 53 : 1-10 வசனங்களில் விவரித்திருக்கிறபடி மேசியாவின் கரத்திலிருந்து வரும் செழிப்பான காலங்கள் பொதுவாக இஸ்ரவேல் ஜனங்கள் ஒட்டுமொத்தமாக தங்கள் மீறுதல்களை அறிக்கையிட்டு தேவனுடைய அன்பை மேசியாவின் மூலம் பெற்றுக் கொள்ளவேண்டும். இது யாக்கோபின் இக்கட்டுக்

காலத்தின் முடிவிற்குப் பின்னர்தான் சம்பவிக்கும் அதற்கு முன்னதாக இவைகள் ஒன்றும் நடைமுறைக்கு வராது (எரே. 30 : 7-24; சகரி. 12 : 9, 10) இப்போது இந்த யாக்கோபின் இக்கட்டுக் கால இறுதி நிலை இப்பொழுது உலகத்திற்கு வந்திருக்கிறது. (தானி. 12 : 1) அந்நாளிலே தேவன் " தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங் களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின அவரை நோக்கிப் பார்த்து. ஒருவன் தன் ஒரே பேரானவனுக்காகப் புலம்புகிறது போல அவருக்காக புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக் யகிறதுபோல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள் என உரைக்கிறார். (சகரி. 12 : 16)

(3) இதன் மூன்றுப் பகுதியாக வருவது ஏசா. 53 : 11, 12 வசனங்கள் இவை அதன் மகிமையான உச்சக்கட்டத்தைக் கூறுகிறது. இஸ்ரவேலின் மனம் வருந்தியதின் செய்திகளை தேவன் ஒப்புக் கொண்டு தம் வாக்குறுதியை மீண்டும் உறுதி செய்வார். அதன்படி என்னவென்றால் விசுவாசமும் நீதியும் கொண்ட அவருடைய தாசன் உண்மையிலேயே மேன்மை அடைவார். "தேவன் அவரை உயர்வாக உயர்த்துவார். அத்துடன் அவருடைய தாசன் அவரின் அறிவைக் கொண்டு அநேகருக்கு நியாயத்தீர்ப்பை நடப்பித்துக் காட்டுவார். இவை அத்தனையும் அவரின் சரிநிகரான கிரயப்பொருளாக தம்மை பலி செலுத்தியதின் பலனாக ஏற்படும். அவர்களின் மீறுதல்களுக்காக அவர் தம் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்." அத்துடன் அவர்களுக்காக பரிந்தும் பேசுகிறார்.

## தேவனுடைய தாசன் தான் "அந்த கிளை"

### GOD'S SERVANT -- "THE BRANCH"

ஹின்னே (hinneh) (இதோ) என்கிற எபிரேய வார்த்தையின் மூலம் தேவன் ஏசாயா 52 : 13-ல் தம்முடைய தாசனாகிய அவரால் அபிஷேகம் செய்யப் பட்டவரை அறிமுகம் செய்கிறார்." அதிக முக்கியத்துவம் கொண்ட பகுதிகளின் கவனத்தை இழுப்பதற்கு தேவன் அடிக்கடி இந்த வார்த்தைகளை உபயோகிப்பது உண்டு. இப்படித்தான் அவர் சகரி. 3 : 8-ல் தமது தாசனை அறிமுகம் செய்கிறார். "இதோ கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப்பண்ணுவேன்." (கிளை என்று கூறுகையில் மரத்தின் கிளைகளில் ஒன்று என கருதலாகாது. அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரேய வார்த்தை சீமேக் (tsemach) என்பது ஓர் மரத்தின் ஆணி வேரிலிருந்து புறப்பட்டு வருவதைக் குறிக்கும். அப்படித்தான் தாவீதின் வம்சத்திலிருந்து ஓர் கன்னி தாயிடமிருந்து மேசியா வெளிப்பட்டார்.

அடுத்து ஒரு கல்லை நிழல் அடையாளமாக பாவித்து தேவன் தமது தாசனைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறுகிறார். (வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. சங். 118 : 22) இந்த தேவனுடைய தாசனுக்கு தெய்வீக ஞானம் முழுமையாக வழங்கப்படும். ("ஏழு கண்கள்" வசனம் 9; 4 : 10) உலகின் மிகப்பெரிய ஆயிரம் ஆண்டுகள் கொண்ட அந்த நியாயத்தீர்ப்பு நாளின்போது தேவனுடைய தாசன் இந்த ஞானத்தை இவ்வுலகின் மனுக்குலத்தை ஆசீர்வதிக்க பிரயோகிப்பார். (சங். 90 : 4; 96 : 10-13) இந்த தேசத்தின் அக்கிரமத்தை அவர் "ஒரே நாளில்" நீக்கிப்போடுவார். (சகரி. 3 : 9, 10) மேலும் இது குறித்து சேனைகளின் கர்த்தர் கூறுவது என்னவென்றால் அந்நாளிலே பாவத் தையும் அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும். "அந்நாளிலே நான் விக்கிரகங்களின் பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன். அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை. தரிசனம் சொல்லுகிறவர் களையும். அசுத்த ஆவியையும் தேசத்திலிருந்த போய்விடவும் பண்ணுவேன்." (சகரி. 13 : 1, 2)

தேவன் மறுபடியும் தம்முடைய தாசனை "இதோ ஒரு புருஷன் அவருடைய நாமம் **கிளை** என்று அறிமுகம் செய்கிறார். மேலும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி மேசியா இராஜாவாகவும் அவர் அரசாட்சி செய்வார் என சகரியா 6 : 12, 13-ல் விவரிக்கிறார்." அது பின்வருமாறு "இதோ ஒரு புருஷன், அவருடைய நாமம் **கிளை!** என்னப்படும். அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பிக் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்." தாவீதின் வேரிலிருந்து அதாவது அவனுடைய கோத்திரம். குடும்பத்திலிருந்து முளைத்தெழும் கிளை. அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்: அவர் மகிமைப் பொருந்தினவராய் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; அது உரிமையினால் அவருக்கே உரியதாயிற்று எசே. 21 : 27; ஆதி. 49 : 10 தம்முடைய சிங்காசனத்தின் மேல் ஆசாரியராயும் இருப்பார். (மெல்கிசேதேக்கின் முறைமையின்படி - சங். 110 : 4) இவ்விரண்டின் நடுவாக சமாதானத்தின் ஆலோசனை விளங்கும் (ஒரே நபரோடு இராஜ்யபாரமும் ஆசாரிய ஊழியமும் இணைக்கப்பட்டிருந்தாலும் இந்த இரண்டு உத்தியோகங்களுக்கிடையே எவ்வித நியாயக்கேடும் நடக்காது.)

மறுபடியும் சகரியா 9 : 9, 10 வசனங்களில் தேவன் தமது தாசனை அறிமுகம் செய்கிறார். மறுபடியும் அவரை இதோ அண்ட சராசரம் முழுவதையும் சமாதானமாக அரசாளும் இராஜா என அறிவிக்கிறார். அவர் கூறுவதாவது "சீயோன் குமாரத்தியே மிகவும் களிகூரு: எருசலேம் குமாரத்தியே கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும் கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமா யிருக்கிறார். (இது மேசியாவின் முதல் வருகையைக் குறிக்கும். அப்போது அவர் பாவநிவாரண பலியைக் கொடுக்க வந்தார். இது சங். 22; 102. ஏசாயா 53, முதலான பகுதிகளில் விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது) ........ அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார். அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரம் தொடங்கி மறு சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்."

எரே. 23 : 5, 6 வசனங்களில் சொல்லப்பட்டி ருக்கும் தீர்க்கதரிசன செய்திகளையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள். "இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை (ஓர் நீதியான துளிர்) எழும்பப் பண்ணுவேன்: அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம் பண்ணி (லீசர், ரோதர்காம், A.R.V. யூத வெளியீட்டு சங்க மொழிபெயர்ப்புகளைப் பார்க்கவும்.) பூமியிலே நியாயத்தையும் (போதனைகளையும்) நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும் (இரண்டு கோத்திரத்தார்) இஸ்ரவேல் (பத்து கோத்திரங்கள்) சுகமாய் வாசம் பண்ணும். அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" (யங் மொழிபெயர்ப்பு செப்டாஜின்ட் பிரதியைப் பார்க்கவும்) என்பதே. "தேவனுடைய தாசனாகிய அந்த மேசியா மூலமாக மாத்திரமே இரட்சிப்பையும் நீதியையும் இந்த பூமியில் நிலைநிறுத்துவார்."

மேலும் எரே. 33 : 15, 16 வசனங்களில் பின்வரு மாறு சொல்லப்பட்டிருக்கிறது "அந்நாட்களிலும், அக்காலத் திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப் பண்ணுவேன். அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியை யும் நடப்பிப்பார்." அந்நாட்களில் (ஆயிர வருட யுகத்தில்) யூதா இரட்சிக்கப்பட்டு எருசலேம் சுகமாய்த் தங்கும்; அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் நாமத்தால் அவள் அழைக்கப்படுவாள். (யங் மொழிபெயர்ப்பு பார்க்கவும்)

அந்நாளிலே (அந்த ஆயிரவருட காலத்தில்)

கர்த்தரின் கிளை (துளிர், முளைவிடுதல்) அலங்காரமும் மகிமையுமாயிருக்கும். பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமயிருக்கும் ........... அப்பொழுது சீயோனில் மீதியாயிருந்து எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்த னென்று சொல்லப்படுவான். அப்பொழுது ஆண்டவர் சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவுவார் (ஏசா. 4 : 2-4)

தேவன் தமது தாசனை ஏசா. 42 : 1-7 வசனங்களின் மூலமாகவும் அறிமுகப்படுத்துகிறார். அது பின்வருமாறு. "இதோ நான் ஆதரிக்கிற தாசன், நான் தெரிந்து கொண்டவரும் என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே (இவர் மரணத்தின் பாடுகளை அனுபவிப்பதற்காக மாம்சத்திலே வெளிப்பட்டாலும் அவர் தான் அவர்களின் பரிசுத்தர். அவரை மானிடர்கள் அசட்டை செய்திருக்கலாம். ஏசா. 49 : 7) என் ஆவியை அவர்மேல் அமரப் பண்ணினேன்." (அவர்தான் அந்த மேசியா; அபிஷேகம் பண்ணப்பட்டவர்) அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார் ............. அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துவார். (ஆயிரம் ஆண்டுகள் கொண்ட நியாயத்தீர்ப்பு நாளின்போது இவைகள் சம்பவிக்கும்)

## "என்னுடைய தாசன் சிறப்பாவார்"

### "MY SERVANT SHALL PROSPER"

மேலே குறிப்பிட்டிருப்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் தமது தாசனாகிய மேசியாவை "கர்த்தரின் கிளை" எனக் கூறி அறிமுகம் செய்கிறார் (ஏசா. 4 : 2) இத்துடன் அவரை "தாவீதின் கிளை" எனவும் கூறுகிறார் (எரே. 23 : 5) இந்த காரணத்தினாலேயே சில சமயங்களில் அவரை "தாவீது" என அழைக்கிறார்கள். (எரே. 30 : 9; எசே. 34 : 23, 24; 37 : 24, 25; ஓசியா 3 : 5 இவற்றுடன் ஏசாயா 9 : 7 ஒப்பிடுக). அதுமாத்திரமல்ல ஏசாயா 11 : 1 தேவன் அவரது தாசனை ஒரு **கோலுக்கு** ஒப்பிட்டு அறிமுகம் செய்கிறார். (அவரது வல்லமையின் செங்கோல் - சங். 110 : 2) "ஈசாயெனும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றும்" (ஏசா. 11 : 1). இந்த சிறப்புமிக்க அதிகாரத்தின் எஞ்சிய பகுதிகள் தேவனின் ஆவி அவர்மேல் தங்கியிருப்பதை விவரிக்கும். அவர் ஞானமாய் நடந்து கொள்வார் (வசனம் 2-5) அவர் ராஜ்யம் இந்த பூமியில் இருக்கும் (அவருடைய பரிசுத்த பர்வதம் வசனம் 9) அது சமாதானத்தாலும் கர்த்தரை அறியும் அறிவாலும் நிறைந்திருக்கும் (வசனம் 6-9) அந்நாளில் (அந்த ஆயிர வருட யுகத்தில் எல்லா ஜனங்களையும் அவர் தன் பக்கம் இழுத்துக் கொள்வார் (வசனம் 10) அவர் முதல் முறை தமது கரத்தை உபயோகித்த பிற்பாடு இரண்டாம் முறையும் எஞ்சியிருக்கிற தமது ஜனங்களை மீட்கும் பொருட்டு உபயோகிப்பார். (முதல் முறையின் போது தமது ஜனங்களை பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து கொண்டு வருவார் (வசனம் 11, 12) அவர்களுக்கு அவர்களின் சத்துருக்கள் மேல் வெற்றியைக் கொடுப்பார். அவர்களுக்காக ஒரு இரட்சிப்பின் பெரும்பாதையை ஏற்படுத்துவார்.

இவ்வாறாக ஏசா. 52 : 13-ல் மேசியாவை ஓர் **தாசன்** என்கிற ஸ்தானத்தில் வைத்து அவரை அறிமுகம் செய்த பிற்பாடு (இதோ என்னுடைய தாசன்) தேவன் அவரைக் குறித்துச் சொல்லுகையில் அவர் ஞானமாய் நடப்பார் என உத்திரவாதம் அளிக்கிறார். (எபரேய மொழியில் "சாக்கல்" (sakal) ஞானமாய் செயல்படுதல், ஆகையால் செழிப்படைவதற்கு ஏற்றாற்போல் இவ்வாறு 1 சாமு. 18 : 14; 1 ராஜா. 2 : 3; எரே. 23 : 5 ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.) அவர் "ஞானமாய் செயல்படுவார்" "திறமையுடன் செயல்படுவார்." கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும் ஏசா. 53 : 12 அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்.

அவர் ஆபிரகாமிற்கும் மேலாக உயர்த்தப் பட்டிருக்கிறார். ஏனெனில் அவர்தான் ஆபிரகாமின் பெரிய வித்து. அவர் மூலமாக இந்த பூமியின் வம்சங்கள் யாவும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி, 22 : 18) அவர் மோசேக்கும் மேலாக உயர்த்தப்பட்டிருப்பார். ஏனெனில் அவர் தான் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருப்பார் - இது மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை விட சிறந்ததாக இருக்கும் (எரே. 31 : 27-34; உபா. 18 : 15-19) அவர் தாவீதைவிட உயர்ந்தவர். ஏனெனில் அவர் தாவீதின் குமாரனாயிருந் தும் தாவீதிற்கு ஆண்டவராகிறார் (சங். 110 : 1). அவர் ராஜாவும் மீட்பருமாயிருக்கிறார். (சங். 72) அவர் தூதர்களையும் விடவும் மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறார். ஏனெனில் எந்த ஒரு தூதனைக் குறித்தும் தேவன் பின்வருமாறு கூறியது இல்லை. "தேவனே உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர். ஆதலால் தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்." (சங். 45 : 6 , 7)

ஆகையால் தேவனுடைய தாசன் மிகவும் அதிகமாக (எபிரேய பதத்தின்படி) உயர்த்தப்பட்டு மகிமைப்படுத்தப்பட்டு மிகவும் மேன்மைபடுத்தப்பட்டவராக இருந்தார். உன்னதங்களிலுள்ள எல்லா துரைத்தனங் களுக்கும் அதிகாரங்களுக்கும். வல்லமைக்கும் எல்லா நாமத்திற்குக்கும் மேலான நாமமாய் விளங்குவார். அவர் தம் சத்துருக்களை அவரது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் அந்த தாசன் தேவனுடைய வலது பாரிசத்தில் இருப்பார் (சங். 110 : 1)

## இவைகள் நடந்தேருவதற்கு முன்னர் அவர் பாடுபட வேண்டியது அவசியம்

### PREPARATORY SUFFERINGS NECESSARY

தேவன் தமது தாசனை நியாயமற்ற முறையில் உயர்த்த வில்லை. அவர் அந்த உன்னத மேன்மையை அடைவதற்கு முன்னர். அதற்கு தகுதியுடையவர் என்று அவர் நிரூபிக்கப்பட வேண்டியது இருந்தது. அத்துடன் அவர் ஆதாமிற்கும் அவனோடு கூட விழுந்த அவனது அறையில் இருந்த அவனது சந்ததியாருக்கும் தேவனுடைய தாசன் ஓர் சரிநிகரான கிரயப்பொருளை கொடுக்க வேண்டும். சரிநிகரான கிரயப் பொருளை தேவ நீதிக்கு பங்கமில்லாத முறையில் கொடுக்க தேவனால் கூடும். தம்முடைய தாசனாகிய தன்னுடைய ஒரே பேறான குமாரனுக்கும் ஜாதிகளை சுதந்தரமாகவும் பூமியின் எல்லைகளை அவருக்குச் சொந்தமாகவும் கொடுப்பார் (சங். 2 : 7, 8) அந்தப்பிரகாரமே அவரை சமாதானப் பிரபுவாக செயல்பட அனுமதிக்கவும் அவரால் கூடும் (ஏசா. 9 : 6, 7) அவர் ஜாதிகளுக்கு சமாதானம் கூறவும் செய்வார். (சகரி. 9 : 10) அத்துடன் தேவனுடைய தாசன் என்கிற முறையில் "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பகூடும்." பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பா யிருக்கும்படி அவரை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பார். (ஏசா. 49 : 6)

இவ்வாறு தம்முடைய தாசனை அறிமுகம் செய்த பிற்பாடு அவர் ஞானமாய் கிரியை நடப்பிப்பார், அதனால் உயர்வாக உயர்த்தப்படுவார் என்பதையும் முதலில் அவர் தள்ளப்படுவார் என்றும் அவருடைய தாழ்மையைப் பற்றியும் அவரின் முடிவின் பலனாக மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படும் மகிமையான ஊழியத்தையும் தேவன் சுருக்கமாக தெரிவிக்கிறார் (ஏசா. 52 : 14, 15).

“மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும் மனுப்புத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினால் அவரை கண்ட அநேகர் பிரமிப்பு அடைவார்கள்” (இத்துடன் சங். 22 : 6-8; ஏசா. 50 : 6-யை ஒப்பிடுக) (இதில் ஒன்றிற்கொன்று எதிர் மாறாக வருவதை கவனியுங்கள். அவர் மற்றொருவருக் காக பட்ட பாடுகளின் விளைவை கண்டறியலாம்) அநேக ஜாதிகள் இதனால் அவரைக் குறித்து வியப்படைவார்கள். புது உடன்படிக்கையை ஸ்தாபிப்பதற்கு அவர் கொடுக்கும் ஆசீர்வாதங்கள் அவர்களின் சந்தோஷம் பொங்குவதற்கு காரணமாக இருக்கும். இத்துடன் யாத். 24 : 6-8; எசே.. 36 : 25 ஒப்பிடுக). (எல்லா மானிடர்களுக்கும் நித்திய ஜீவன் கொடுக்கப்படும். அவர்கள் இந்த பூமியில் ஆதியில் பெற்றிருந்த அதிகாரங்களை மீண்டும் பெறுவார்கள்.) அவர் நிமித்தம் இராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள். ஏனெனில் தங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்தை அவர்கள் காண்பார்கள். கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள். (இராஜாக்கள் வியப்பாலும். பயபக்தியினிமித்தமும் மௌனமாக எதுவும் பேச முடியாது பிரமித்து இருப்பர்.) (அப்போது அவர்கள் இதற்கு முன்னர் கேள்விப்படாத சத்தியங்களைப் பெற்று சத்தியத்தை புரிந்து கொள்வார்கள். இத்துடன் ஏசா. 49 : 7; சங். 72 : 8-11 வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்க)

இப்படியாக இந்த முகவுரையின் மூலம் (ஏசா. 52 ; 13-15) இந்த முதல் பகுதியில் வரும் தீர்க்கதரிசனத்தின் மையப் பகுதியை நாம் காணலாம். மேலே கூறிப்பிட்டபடி இந்த முழு தீர்க்கதரிசனத்தின் ஓர் மிக சுருக்கமான தொகுப்பு கிடைக்கிறது. இதனுடைய முழு விவரங்கள் பெரிய அளவில் ஏசா. 53-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## இஸ்ரவேலர்கள் தங்கள் தவறுதலுக்காக வருந்தி அறிக்கை செய்தல்

### ISRAEL'S PENITENTIALCONFESSION

மகா மேசியாவைக் குறித்த ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் இரண்டாம் பகுதியின் (53 : 1-10) மையக் கருத்தாக வருவது இஸ்ரவேலர்கள் தங்கள் தவறுதலுக்காக வருந்தி அறிக்கை செய்தல். இது குறித்து மேலே குறிப்பிட்டுள்ளோம். இதில் முக்கிய பங்காக வருவது யாக்கோபின் இக்கட்டுக் காலத்திலும் அதன் முடிவின் போதும் அவர்கள் மேல் “கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்” அப்போது அவர்கள் அவரைக் குறித்து சிந்திப்பார்கள். அவர்கள் தாங்கள் குத்தின அவரை நோக்கிப் பார்த்து ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காக புலம்புகிறது போல புலம்புவார்கள். “அந்நாளிலே எருசலேமில் ஓர் மிகப் பெரிய புலம்பல் இருக்கும்” (சகரி. 12 : 9-11)

## ஓர் முக்கியமான கேள்வி

### AN IMPORTANT QUESTION

இதன் பிறகு இஸ்ரவேலர்கள் தங்கள் மேசியா யார் என்கிற உண்மையையும் அவரை ஏற்றுக் கொண்ட பிற்பாடு கீழ் குறிப்பிடும் கேள்விகளை வினாவலாம் **(1)** எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் (ஏசா. 53 : 1) அல்லது நாங்கள் கூறியதை (சொல்லர்த்த மாக யார் கேட்டார்கள்?)” - அவர்கள் கேள்விப்பட்ட செய்தி என்னவென்றால் தேவனுடைய வியக்கத்தகுந்த அந்த தாசனைப் பற்றியே. அவர் எவ்வாறு தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டார் என்றும் அவர் எவ்வாறு தமது மாபெரும் பலியை ஓர் பரிபூரண மனுஷீகத்தின் மூலம் கொடுத்தார் என்றும் அவர் எவ்வாறு ஆதாமிற்கும் அவனிடத்திலிருந்து வந்த மனுக்குலத்திற்கும் ஓர் சரிநிகரான கிரையப் பொருளை ஈடு பலியாக செலுத்த முடிந்தது என்றும் அத்துடன் இஸ்ரவேலர்கள் மேல் நியாயப்பிரமான விதிகளின்படி விழுந்த சாபத்திலிருந்து எவ்வாறு விடுவித்தார் என்றும் அவர்கள் கேள்விப்படுவார் கள். ஆனால் எந்த விதியை அவர்கள் மீறினார்களோ அதனை அவர்களுக்காக அவர் முழுமையாக கடைபிடித்து (உபா. 27 : 26; ஏரே. 11 : 3) மரத்தில் தொங்கியும் கூட (உபா. 21 : 22, 23) நிறைவேற்றினார். அவர் நியாயப்பிர மாணத்தின் சாபத்தின் முடிவாக ஆகி நீதிக்கு முன்பாக தங்களுக்குப் பதிலாளாக நிற்பவராக அவரை ஏற்றுக் கொண்டு அவரில் விசுவாசம் வைப்பவர்களுக்கு ரட்சிப்பின் நம்பிக்கையை கொடுப்பார்.


## “கர்த்தரின் புயம்”

### “THE ARM OF THE LORD”

கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? (ஏசா. 53 : 1) இங்கு தேவனுடைய புயம் ஓர் அடையாள மாகும். இது அவருடைய மிகப் பெரிய வல்லமையைக் குறிக்கும். அவர் பின்வருமாறு எகிப்திலே இருந்த இஸ்ரவேலருக்கு (யாத். 6 : 6) “நான் ஓங்கிய கையினாலும் மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்டு வருவேன்”என்று கூறினார். அவர்களுக்கு கிடைத்த இந்த மாபெரும் விடுதலைக்குப் பின்னர் அதோடு எகிப்தியரை விரட்டி அவர்களுக்கு அழிவை உண்டு பண்ணியதன் பிறகு மோசேயும் அவரோடு சேர்ந்த மற்ற இஸ்ரவேலரும் பின்வரும் பாட்டை பாடினார்கள் (யாத். 15 : 12, 16). “நீர் உமது வலது கரத்தை நீட்டினீர் பூமி அவர்களை விழுங்கிப் போட்டது ...... உமது ஜனங்கள் கடந்து போகும் வரையும் அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப் போல அசைவற்றிருப்பார்கள் .......” இஸ்ரவேலில் உள்ள விசுவாசிகள் பின்வருமாறு வேண்டுதல் செய்வார் கள். ஏசா. 51 ; 9-ல் “எழும்பு, எழும்பு, பெலன் கொள். கர்த்தரின் புயமே, முந்தின நாட்களிலும் பூர்வ தலை முறைகளிலும் எழும்பினபடி எழும்பு” (உதாரணத்திற்கு எகிப்தியரிடமிருந்து இஸ்ரவேலருக்கு முந்திய நாட்களில் மாபெரும் விடுதலை கிடைத்தது)

இப்போது தேவனுடைய மகா வல்லமை அவருடைய தாசனாகிய மேசியாவிடம் கொடுக்கப்பட்டிருக் கிறது. விசுவாசிக்கிறவர்களுக்கு தேவனின் வல்லமையி னால் இரட்சிப்பு கிடைக்கும். “எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார். பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்” என்று ஏசா. 52 : 10-ல் நாம் வாசிக்கிறோம். இது யாக்கோபின் இக்கட்டுக் காலங்களுக்குப் பிறகு மேசியாவின் மகிமையான ஆட்சி இந்த பூமியிலே வருகையில் அவர் ஆபிரகாமின் வித்து என்கிற முறையின் படி இந்த பூமியிலுள்ள வம்சங்கள் யாவற்றையும் ஆசீர்வதிப்பார். (ஆதி. 22 : 18) இப்படியாக தேவனுடைய தாசன் வருவார், “அவர் தமது புயத்தினால் அரசாளுவார்.” (ஏசா. 40 : 10) தங்கள் தவறுதலுக்காக வருந்திய இஸ்ரவேலர்கள் அப்போது “யூதா பட்டணங்களை நோக்கி இதோ, உங்கள் தேவன்!” என்று கூறுவார்கள். (ஏசா. 40 : 9)

ஆனால் யார் இந்த செய்திகளை விசுவாசித்திருக் கிறார்கள்? எத்தனைப்பேர் வெளியாக்கப்பட்டிருக்கும் தேவனுடைய புயத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்? தேவனுடைய வல்லமையினால் இரட்சிப்பதற்காக அவளுக் காக மரித்த, அசட்டை பண்ணப்பட்டவருமாகிய தேவனு டைய தாசனை காண எத்தனை பேர் தங்கள் கண்களை திறந்துள்ளனர்? குறிப்பாக பதிலளிப்பதென் றால் - **மிகவும் சொற்ப பேராகத்தான்** இருப்பர். உண்மை யிலேயே இதுவரை அப்படித்தான் இருந்திருக்கிறது!






# துக்கமும் புலம்பலும் ஆரம்பமாயிற்று

## Sorrow and Mourning Begun

ஆதாமின் குடும்பத்தில் ஏற்பட்ட முதல் மரணம், கண்டிப்பாக மரணப்பிடியின் அச்சத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும். ஸ்திரியின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்ற தேவ வாக்குத்தத்தத்தின் மையமாக இருந்த நம்பிக்கை தற்காலிகமாக அணைந்தது. சிறிது காலத்திற்குப் பிறகு சேத் பிறந்தான். இந்த சேத் தான் தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மனிதனாக இருக்கலாம் என்று அவனது பெற்றோர் நம்பினார்கள் என்று அவன் பெயர் குறிப்பிடுகிறது – தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டவர் மேசியா என்றும் அவர் வெகு காலத்திற்குப் பின் வரவேண்டியவர் என்றும், இன்னும் உலகம் அவருடைய வேலைக்காக காத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் அவர்கள் காணாமல் தவறினார்கள்.

என்ன தான் முதல் மரணத்தைப் பற்றி நாம் பேசினாலும். தேவனின் நோக்கு நிலையில் ஆதாமும் அவனுடைய சந்ததியும் ஏற்கனவே மரித்துவிட்டது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இதனால் இரட்சகருடைய வேலையாகிய பாவநிவாரண பலியின் மூலமாக இல்லாமல் ஒருவராலும் நித்திய ஜீவனைத் திரும்பப்பெற முடியாது.

தற்போது உலகின் மக்கள் தொகை 1600 மில்லியன் (2009-ல் சரிசெய்யப்பட்ட புள்ளி விவரத்தின்படி 6,743, 243,000). ஒவ்வொரு நாளும் 90,000 பேர் இறக்கிறார்கள் (2009-ல் சரிசெய்யப்பட்ட புள்ளி விவரத்தின்படி 166, 125)

நம்முடைய விழுந்துபோன மனுக்குலத்துக்கு மற்றவர்களுடைய கவலைகளையும் கஷ்டங்களையும் ஆழமாக புரிந்து கொள்ள முடியாது என்பது சந்தேகமில்லாத உண்மை யாகும். ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும், குடும்பத்துக்கும் ஏராளமான வருத்தங்கள் இருந்தாலும் அவைகள் தாங்கக்கூடியவைகளே.

கவிஞர் ஒருவர் உண்மையில், தவிர்க்க முடியாத ஆழ்ந்த துக்கத்தை உணர்ந்தவராய்

“சென்று உன்னுடைய வருத்தத்தைப் புதைத்துவை
அதனுடைய பங்கு உலகத்திடம் உண்டு
சென்று அதை ஆழமாகப் புதை
அதை ஜாக்கிரதையாக மறைத்துவை” – என்று

நன்றாக பாடியுள்ளார்.

நம்பிக்கை, சந்தோஷம், சமாதானம் தேவ வாக்குத்தத்தத்தின் மூலமாக மட்டுமே நமக்கு வரும், இனி ஒருபோதும் வருத்தம் இல்லாத, மரணம் இல்லாத, பாவம் இல்லாத, வலி இல்லாத காலம் வந்து கொண்டுதான் இருக்கிறது. மேசியாவின் ராஜ்யம் பாவத்தையும் மரணத் தையும் பரிகரித்து தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியில் செய்யப்படும்படி ஸ்தாபிக்கும். (மத். 6 : 9, 10)

பாவம் மற்றும் அதனால் ஏற்பட்ட தண்டனைகள் ஆகியவற்றால் உண்டான அனுபவங்கள் நம்மை இரக்கமுள்ள வர்களாய் ஆக்கியிருக்கிறது. பிறருடைய துன்பத்தைக் கூட்டுவதற்கு நாம் எதையும் செய்யவில்லை, மாறாக அதை இலகுவாக்கு வதற்கே எல்லாவற்றையும் செய்கிறோம். “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்று இயேசுவின் வார்த்தைகள் அனுதாப உணர்வை தூண்டுகின்றன. சோர்ந்து போன இருதயமுள்ள வர்களுக்கு கிறிஸ்துவோடே உள்ள ஐக்கியத்தைத் தவிர வேறு எங்கும் இளைப்பாறுதல் இல்லை.

## பாடம் 14–ல் உள்ள கேள்விகள்

1) ஆதாமின் குடும்பத்தில் முதன்முதலில் மரித்தது யார்? ஆதி. 4 : 8-ஐப் பார்க்கவும்
2) ஏதேன் தோட்டத்தில் தேவன் ஸ்திரிக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? முதல் பாரா.
3) வாக்குத்தத்தத்தில் ஆபேலுடைய பெற்றோர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் மீது அவனுடைய மரணம் எவ்வித விளைவை ஏற்படுத்தியது?
4) ஆபேலுடைய மரணத்திற்கு பின் பிறந்த குமாரன் யார்?
5) அவனுடைய பெயர் எதனைக் குறிக்கிறது?
6) ஆதாமும் ஏவாளும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் மேசியாவே என்பதை உணர்ந்தார்களா?
7) தேவ நோக்கு நிலையிலிருந்து பார்க்கும்போது ஆபேலின் மரணம் முதலாம் மரணமா? 2-வது பாரா
8) எதன் மூலமாக ஒருவர் திரும்பவும் நித்திய ஜீவனைப் பெற முடியும்,
9) ஒவ்வொருவராலும் மற்றவர்களுடைய கவலைகளையும் கஷ்டங்களையும் ஆழமாக புரிந்து கொள்ள கூடுமா?
10) நாம் நமது துக்கங்களை என்ன செய்ய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.
11) பாவத்தையும் மரணத்தையும் முடிவாக ஜெயங்கொள்வது எது. 5-வது பாரா.
12) பாவமும் அதின் தண்டனையும் அதனோடுள்ள நமது அனுபவங்களும் நம்மீது எவ்வித விளைவை ஏற்படுத்துகின்றன? 6-வது பாரா
13) மற்றவர்களுடைய துக்கங்களைக் குறித்து நாம் எவ்வாறு உணர்ந்து செயல்பட வேண்டும்.
14) வருத்தமடைந்த இருதயத்திற்கு இளைப்பாறுதல் எங்கே கிடைக்கும்?

சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டுவேன்,
அழிவின் காலத்தை இழுத்து கட்டக்கூடிய
பரிசுத்தமான சங்கதியின் வெளிச்சமெல்லாம்
அதன் உச்சியை கெம்பீரத்துடன் சூழ்ந்திருக்கின்றன.

வாழ்வின் துயரங்கள் என்னை மேற்கொள்கையில்
நம்பிக்கைகள் ஏமாற்றி பயங்கள் பயப்படுத்துகையில்
சிலுவை என்னை ஒருபோதும் கைவிடுவதில்லை
அதோ பார்! அது சமாதானத்தோடும்,
சந்தோஷத்தோடும் பிரகாசிக்கிறது.

ஜீவ சூரியனின் ஒளி கதிர்கள் பிரகாசிக்கும்போது
என் பாதையின்மேல் பிரகாசமும், தெளிவும் இருக்கும்.
சிலுவையிலிருந்து புறப்படும் ஒளிக்கற்றைகள்
அந்த நாளுக்கு புது ஒளியைச் சேர்க்கின்றன.

அழிவும் ஆசீர்வாதமும், வேதனையும் மகிழ்ச்சியும்,
சிலுவையால் பரிசுத்தமாக்கப்படுகின்றன
அளவிடவே முடியாத சமாதானமும்
எல்லா சமயத்திலும் நீங்காதிருக்கும்
சந்தோஷங்களும் அங்கே இருக்கிறது.

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Laymen's Home Missionary Movement**
32 D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**